

# திறவுகோல்

2050 பங்குனி
மாத இதழ்

முதலாம் ராஜாதிராஜ சோழரும் மன்னார்குடியும்....

---

நாம் தொலைத்த தோழர் முகிலன்

---

மனிதி

---

சில சொற்களுக்கு பின்னே சில வன்மங்கள்

செண்பக வனம்

வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# போரா?? அக்கப்போரா??



செந்தில் பக்கிரிசாமி
மன்னை

விக்ரம் வேதா திரைப்படத்தில் ஒரு காட்சியில் விஜய் சேதுபதி சொல்வார்
‘‘ஒருத்தன் பொருளை இங்க தொலைச்சுட்டு அங்க தேடிக்கிட்டு இருந்தானாம்.ஏண்டா இங்க பொருளை தொலைச்சுட்டு, அங்க போய் தேடுறன்னு கேட்டதுக்கு, இங்கதான் வெளிச்சமா இருக்கு. அங்க இருட்டா இருக்குன்னு சொன்னானாம்’’

இதுல வெளிச்சத்துல ஏன் தேடுறான்னு காரணம் சொல்லாமல் விட்டு இருக்கும். அது என்ன காரணம்னா, வெளிச்சத்தில தேடுனாத்தான் நாம தொலைச்ச பொருளைத் தேடிக்கிட்டு இருக்கோம்ன்னு பாக்குறவனுக்கு தெரியும். சரி இவன் உண்மையா தேடிக்கிட்டு இருக்கான்னு பொருளோட உண்மையான முதலாளிக்கு தெரியும். இருட்டுல தேடுனா எப்படி தெரியும் அடுத்தவங்களுக்கு?
ஆக பொருள் கிடைக்க வேண்டும் என்பதை விட, பொருளைப் பெற நாங்கள் முயற்சி செய்து கொண்டு இருக்கிறோம் என்ற எண்ணத்தை பதிய வைக்க வேண்டும். இதுதான் எண்ணம்.

எந்த காலத்திலும் பொருள் கிடைக்க போவதில்லை என்ற உண்மை தேடுபவனை தவிர யாருக்கும் தெரியாது.

ஏறக்குறைய காஷ்மீர் பிரச்சனையும் அது போலத்தான்.

காஷ்மீரின் உண்மை பிரச்சினையென்ன?,
ஏன் காஷ்மீருக்காக தொடர்ந்து போர்கள் நடைபெறுகின்றன?, காஷ்மீர் மக்களின் நிலைப்பாடு என்ன?, அவர்கள் சந்திக்கும் பிரச்சனை என்ன? போன்றவை சாமான்ய மக்களுக்கு தெரிய வாய்ப்பில்லை.

என்னதான் காஷ்மீர் பிரச்சனை??

வெள்ளையர்கள் நாட்டை விட்டு வெளியேறும் போது இந்தியாவை ஒரு நாடாக பிரிட்டிஷார் அறிவித்தார்கள்.
அவ்வாறு அறிவித்த இந்தியாவில் காஷ்மீர் இருக்கவில்லை.

பாகிஸ்தானை ஒரு நாடாக அறிவித்தனர்.
அவ்வாறு அறிவிக்கப்பட்ட பாகிஸ்தானிலும் காஷ்மீர் இருக்கவில்லை.

அது தனி நாடாகத்தான் விடுதலைப் பெற்றது.

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் மாட்டிக்கொண்ட காஷ்மீரின் 33 சதவிகிதம்

நிலப்பரப்பு இன்று பாகிஸ்தானில் உள்ளது. 67 சதவிகிதம் நிலப்பரப்பு இந்தியாவில் உள்ளது.

காஷ்மீர் தனது நாட்டின் பகுதி என்று இந்திய அரசு கருதினால் பாகிஸ்தான் வசம் உள்ள காஷ்மீரை - ஆக்கிரமிக்கப்பட்ட காஷ்மீர் என்று இந்திய அரசால் குறிப்பிடப்படும் பகுதியை மீட்பதற்காக ஏன் பாகிஸ்தானுடன் போரிட்டு மீட்கவில்லை??

அதுபோல் காஷ்மீர் எங்களுக்குச் சொந்தம் என்று பாகிஸ்தான் உண்மையில் கருதினால் இந்தியாவால் ஆக்ரமிக்கப்பட்ட காஷ்மீரை மீட்கும் கடமை அந்த நாட்டுக்கு உள்ளதல்லவா? எத்தனையோ போர்களை இந்தியாவுக்கு எதிராக நடத்திய பாகிஸ்தான், காஷ்மீர் எங்கள் நாட்டைச் சேர்ந்தது; அதைப் போரிட்டு மீட்கப் போகிறோம் என்று அறிவித்து போர் தொடுத்து இருக்க வேண்டும
ஏன் செய்யவில்லை??

இரு நாடுகளுமே தங்கள் பகுதி என்று வாதிட்டாலும் ஏன் போர்ப்பிரகடனம் செய்ய முடியவில்லை??

இரு நாடுகளுக்கும் காஷ்மீர் எப்படி தங்கள் நாட்டுடன் இணைக்கப்பட்டது என்ற வரலாறு தெரியும் என்பதே இதற்குக் காரணம்.

காஷ்மீர் பிரச்சனையின் வரலாறு:

இந்தியாவில்தான் காஷ்மீர் இருக்கிறது. ஆனால், அது எப்படி இந்தியாவுக்குள் வந்தது என்பதை இன்றைய பெரும்பான்மையானவர்கள் அறியமாட்டார்கள். இந்தியா சுதந்திரம் பெற்றபோது 526 சமஸ்தானங்கள் இருந்தன. இவற்றில் பெரும்பாலானவை இந்தியாவுடன் இணைந்துவிட்டன. இணைய மறுத்த ஐதராபாத் சமஸ்தானத்தை இராணுவ பலத்தால் இணைத்தார் அன்றைய உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் பட்டேல்.

காஷ்மீர் சமஸ்தானத்தை இந்து மன்னரான ஹரி சிங் ஆட்சி செய்து வந்தார். அங்கே உள்ள மக்களில் பெரும்பான்மையானவர்கள் இஸ்லாமியர்கள். இதனால் காஷ்மீர், இந்தியாவுடன் இணைவதா, பாகிஸ்தானுடன் இணைவதா என்ற குழப்பநிலை நீடித்தது.

பாகிஸ்தானுடன் இணைந்தால் தனி சமஸ்தானத் தகுதியுடன் நீடிக்கலாம் என்றும், இந்தியாவுடன் இணைந்தால் ஏற்கனவே உள்ள மாநிலங்களில் ஒன்றாகி, தனித் தன்மையை இழக்க வேண்டி வரும் என்றும், மன்னர் ஹரி சிங்கிடம் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு, தனது பூர்வீகமான காஷ்மீர், இந்தியாவுடன் இணைந்திருக்க வேண்டும் என விரும்பினார். இதனை கௌரவப் பிரச்சனையாகக் கருதினார். மேலும் காஷ்மீர் இந்தியாவிற்கு இயற்கை அரண் என்ற காரணத்தாலும் அதை இழக்க விரும்பவில்லை.

காஷ்மீரைத் தன்னுடன் இணைப்பதில் விருப்பம் காட்டிய பாகிஸ்தான் தனது

இராணுவத்தை நிலைநிறுத்தியது. இந்தியாவின் உதவியை நாடினார் மன்னர் ஹரி சிங். இந்திய எல்லையிலிருந்து இந்திய இராணுவமும், பாகிஸ்தான் எல்லையிலிருந்து அந்நாட்டு இராணுவமும் காஷ்மீருக்குள் ஊடுருவின. காஷ்மீரின் மூன்றில் ஒரு பகுதியை பாகிஸ்தான் கைப்பற்றிக் கொண்டது. அது சுதந்திர காஷ்மீர் (Azad Kashmir) என்று பாகிஸ்தான் கூறுகிறது. அதனை ஆக்கிரமிப்பு காஷ்மீர் (Pakistan Occupied Kashmir & POK) என்று இந்தியா கூறுகிறது.

பாகிஸ்தான் கைப்பற்றிய பகுதி போக, எஞ்சிய மூன்றில் இரு பங்கு பகுதியை இந்திய இராணுவம் கைப்பற்றிக் கொண்டது. காஷ்மீர் மீதான உரிமைக்கு இருநாடுகளும் போட்டியிட்டன.

இந்த விவகாரம் 1948-ல் ஐக்கிய நாடுகள் சபைக்குச் சென்றது. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் 21.4.1948 அன்று தீர்மானம் (எண்.47) நிறைவேறியது. இதன்படி இருநாடுகளும் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்ய வேண்டும். ஊடுருவிய பகுதியிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும். ஆனால், இது நிறைவேறவில்லை. இந்தியாவும், பாகிஸ்தானும் தனது செயலைச் சட்டப்பூர்வமானது என்று நிரூபிக்க இயலாததால், காஷ்மீர் மக்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தி தீர்வு காண்பதாக ஐ.நா. சபையில் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

காஷ்மீர் மக்கள் இந்தியாவுடன் இணைய விரும்புகிறார்களா? பாகிஸ்தானுடன் இணைய விரும்புகிறார்களா? அல்லது தனிநாடாகவே இருக்க வேண்டும் என விரும்புகிறார்களா? என்ற மூன்று கேள்விகள் அடிப்படையில் ஓட்டெடுப்பு நடத்த வேண்டும், ஓட்டெடுப்பின் மூலம் கிடைக்கும் மக்கள் கருத்தை இந்தியாவும், பாகிஸ்தானும் மன்னரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதுதான் ஐ.நா. சபையில் செய்துகொண்ட ஒப்பந்தம்.

(ஆனால் ஐநாவின் மூலம் செய்து கொண்ட இந்த ஒப்பந்தத்தை இந்தியாவும், பாகிஸ்தானும் நடைமுறைப்படுத்தவில்லை. எப்படியாவது காஷ்மீரைத் தனதாக்கிக் கொள்ள வேண்டும் என்பது தான் இரண்டு நாடுகளின் நப்பாசையாக இருந்தது. அதனால் தான் இது வரை பொது வாக்கெடுப்பு நடத்தவில்லை)

வாக்கெடுப்புக்கு விடாமல் இந்தியாவுடன் காஷ்மீரை எப்படியும் முழுமையாக இணைத்து விட வேண்டும் என்று நினைத்த இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு இந்தியாவுடன் காஷ்மீர் இணைந்தாலும் அதன் தனித்தன்மைகள் காக்கப்படும் என்று உறுதி அளித்தார்.

அதன் அடிப்படையில் தான் காஷ்மீரின் மூன்றில் இரண்டு பாகம் இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்து வருகின்றது. இந்த உறுதிமொழி இந்திய அரசியல் சாசனத்திலும் சேர்க்கப்பட்டதால் வாக்கெடுப்பு நடத்தும் திட்டத்தை இந்திய அரசு தள்ளிப்போட்டு வந்தது.

இந்தியாவுடன் இணைத்துக் கொள்ளும் போது வாய்மொழியாக மட்டுமில்லாமல் அரசியல் சாசனத்தின் 370 வது பிரிவு உருவாக்கப்பட்டு அந்த வாக்குறுதிகள் சேர்க்கப்பட்டன. இன்று

வரை அரசியன் சாசனப் புத்தகத்தில் இது இருந்து வருகிறது.

(இந்திய அரசியல் சாசனத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டபடி காஷ்மீருக்கான அரசியல் சாசனம் 17.11.1956 ல் அரசியல் சாசனச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அது 26.1.1957 இல், இந்தியாவின் எட்டாவது குடியரசு நாளில் நடப்புக்கு வந்தது.)

370 வது பிரிவு சட்டம் என்ன சொல்கிறது?
மாநில சுயாட்சி.
இராணுவம், வெளியுறவு, தகவல் தொடர்பு துறைகள் தவிர, பிற துறைகள் தொடர்பாக நடுவண் அரசு நாடாளுமன்றத்தில் இயற்றும் சட்டங்கள், இம்மாநிலத்தின் இசைவு இல்லாமல் இயற்றினால், அந்த சட்டங்கள் இம்மாநிலத்திற்கு பொருந்தாது.
மேலும் இம்மாநிலத்தின் எல்லைகளை குறைக்கவோ அல்லது கூட்டவோ முடியாது போன்ற பல சலுகைகளோடு இயற்றப்பட்ட சட்டம்.

1949 சுதந்திர இந்தியாவுக்கு என்று எழுதப்பட்ட அரசமைப்புச் சட்டம் என்ன சொல்கிறது?.

அதன் முகவுரையில் இந்திய மக்களாகிய நாங்கள், 1949 நவம்பர் 26 இல் நிறைவேற்றிக் கொண்ட அரசமைப்புச் சட்டம் என்றே கூறுகிறது. அதாவது இந்தியாவிலுள்ள எல்லா மக்களும் இந்திய மக்கள். ஆனால், காஷ்மீரில் உள்ள மக்கள் முதலில் ஜம்மு காஷ்மீர் மக்கள் அடுத்து இந்திய மக்கள். சட்டப்படி அவர்கள் இரட்டைக் குடியுரிமை உடையவர்கள்.

காஷ்மீருக்கு தனியாக தேசியக் கொடியையும் இந்தியா ஏற்றுக் கொண்டது.

இப்படி இந்திய அரசியல் சாசனத்தில் 370 வது பிரிவு உருவாக்கப்பட்டு காஷ்மீருக்கு தன்னாட்சி உரிமையும், சிறப்பு அந்தஸ்தும் அளிக்கப்பட்டது. பாதுகாப்பு, அயலுறவு, நாணயம், செய்தித் தொடர்பு ஆகியவை மட்டும் இந்திய அரசிடம் இருக்கும். மற்ற எல்லா அதிகாரமும் மாநில அரசிடம் இருக்கும்.

காஷ்மீரை ஆள்வதற்காக மக்களால் தேர்வு செய்யப்படுபவர் ஜம்மு காஷ்மீர் பிரதமர் என்று அழைக்கப்படுவார்.

ஆளுநர் ஜனாதிபதி என்று அழைக்கப்படுவார் என்றும் ஒப்பந்தத்தில் கூறப்பட்டது.

இதன்படி காஷ்மீரின் முதல் பிரதமராக (முதல்வராக அல்ல; பிரதமராக) 1951 ல் ஷேக் அப்துல்லா பதவியேற்றார். மன்னர் ஹரிசிங்கின் மகன் கரன்சிங் ஜனாதிபதியானார்.

ஐநா ஒப்பந்தத்தை இந்திய அரசு மீறியது போலவே இந்து மன்னரிடமும், முஸ்லிம் தலைவர்களிடமும் செய்து கொண்ட ஒப்பந்தங்களையும் ஒவ்வொன்றாக மீறியது.

பிரதமர் முதல்வராக ஆக்கப்பட்டார். ஜனாதிபதி கவர்னர் ஆனார். இப்படி கொடுத்த ஒவ்வொரு வாக்குறுதியும் இந்திய அரசால் மீறப்பட்டது.

ஆனாலும் மீதமுள்ள மாற்றப்படாத மீறப்படாத ஒப்பந்த விதியின்படி காஷ்மீரின் தேசியக் கொடி இந்தியாவின் தேசியக் கொடி அல்ல. காஷ்மீருக்கு என தனியான தேசியக் கொடி என்பது தான் இன்று வரை உள்ள சட்ட நிலைமை.

நேருவும், பட்டேலும் ஒப்புக் கொண்ட விஷயத்துக்காகத் தான், ஐக்கிய நாடுகள் சபையின் முன்னால் செய்து கொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும், காஷ்மீர் தனி நாடு வேண்டும் என போராட்டம் உருவெடுத்தது.

1953 ல் இன்றைய உமர் அப்துல்லாவின் பாட்டனாரும், பரூக் அப்துல்லாஹ்வின் தந்தையுமான காஷ்மீர் சிங்கம் என்று அழைக்கப்பட்ட ஷேக் அப்துல்லா தலைமையில் தேசிய மாநாட்டுக் கட்சி காஷ்மீர் இந்தியாவைச் சேர்ந்தது அல்ல என்று கடுமையான போராட்டம் நடத்தியது.

காஷ்மீரின் நூறு சதவிகித மக்களும் இந்தியாவின் ஒரு பகுதியாக இருப்பதை விரும்பவில்லை என்று உறுதிபடச் சொன்ன கால கட்டம் அது.

பிரதமர் ஜவஹர்லால் நேருவின் உத்தரவுப்படி ஷேக் அப்துல்லா தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு கொடைக்கானலுக்கு கொண்டு வரப்பட்டு 12 ஆண்டுகள் சிறை வைக்கப்பட்டார்.

இதன் பின்னர் நிலைமை இன்னும் மோசமானது.

இதன் பின்னர் 370 வது பிரிவில் சொன்னபடி நடக்காமல் 1954 ஆம் ஆண்டு காஷ்மீர் மாநில அரசை இந்திய அரசு கலைக்கலாம் என்று இந்திய அரசியல் சாசனச்சட்டம் வெளியிடப்பட்டு ஒப்பந்தம் மீறப்பட்டது.

பின்னர் 1957 ஜனவரி 26 ல் இன்னும் ஒரு அரசியல் சாசனச் சட்டத்தின் மூலம் காஷ்மீர் இனி எப்போதும் இந்தியாவின் ஒரு பகுதியாகவே இருக்கும் என்று ஆக்கப்பட்டது.

1948 ல் காஷ்மீரை இந்தியாவோடு,
இணைத்துக் கொள்ளும் போது ஒப்புக் கொண்டு எழுதப்பட்ட 370 வது ஷரத்தின் பல பகுதிகளை இந்திய அரசு படிப்படியாக நீக்கி விட்டது.

ஒன்று ஐக்கிய நாடுகள் சபையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் படி பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

அதைச் செய்யாவிட்டால் இணைக்கும் போது மன்னருக்கும் காஷ்மீர் மக்களுக்கும் அரசியல் சாசனத்தில் அதிகாரப்பூர்வமாக அளித்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டும்.

இரண்டையும் இந்திய அரசாங்கம் செய்யவில்லை. இது தான் காஷ்மீர் மக்களின்

கோபத்துக்குக் காரணம்.

அது மட்டுமின்றி இதற்காகப் போராடும் மக்களை இராணுவச் சட்டம் மூலம் கேள்வி கேட்க முடியாத அதிகாரத்துடன் இராணுவத்தை இறக்கி போர்க்களமாக்கி இருப்பதும் இந்திய அரசு செய்து வரும் மிகப்பெரும் தவறாகும்.

பாதுகாப்பு என்ற பெயரில் அளவுக்கதிகமாக இராணுவத்தைக் குவிப்பது, மாநில அரசைக் கலைத்துவிட்டு குடியரசுத் தலைவர் ஆட்சியை அமைப்பது, தீவிரவாதிகளை ஒடுக்குவது என்ற பெயரில் இளைஞர்களை வேட்டையாடுவது, பெண்களை பாலியல் கொடுமைகளுக்குள்ளாக்குவது என 370 ஆவது பிரிவுக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகள் காஷ்மீரில் அதிகம். காஷ்மீர் மக்களுக்கு வழங்கிய உரிமைகளை அவ்வப்போது இந்திய அரசு பறித்தே வந்துள்ளது.

இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்டத் தமிழர்களை இலங்கையில் படுகொலை செய்த சிங்கள இராணுவத்தின் மீது சர்வதேச நீதிவிசாரணை தேவை என்ற கோரிக்கையை சிங்கள அரசு ஏற்க மறுப்பதற்கும், இந்திய அரசின் காஷ்மீர் நிலைப்பாட்டிற்கும் வேறுபாடு இல்லை.

இந்தியாவுடன் இருக்க மாட்டோம் என்று ஒருமித்து அவர்கள் முடிவு செய்தால் அத்தகையோர் நமது நாட்டுக்குத் தேவையில்லை.

கிழக்கு பாகிஸ்தானாக இருந்த பகுதியினர் பாகிஸ்தானோடு இருக்க விரும்பவில்லை என்று திட்டவட்டமாக அறிவித்து முஜிபுர் ரஹ்மான் என்பவர் தலைமையில் புரட்சி செய்த போது இந்தியாவும் தலையிட்டு பங்களாதேஷ் என்ற தனி நாடாக ஆக்கியது.

பாகிஸ்தானுடன் அம்மக்களும் சேர விரும்பவில்லை என்றால் தனிநாடாக இருப்பது சரிதான் என்று உலக நாடுகளும் ஏற்றுக்கொண்டன.

காஷ்மீர் என்ற பெயரைச் சொல்லி பல ஆயிரம் கோடிகள் வீணடிக்கப்படுகின்றன. உலக அளவில் மனித உரிமை தொடர்பான பல விமர்சனங்களைச் சந்திக்கிறோம்.

உள்நாட்டு மக்களை எத்தனை ஆண்டுகள் இராணுவத்தை வைத்துக் கொண்டு ஆள்வது? என்றெல்லாம் பொறுப்போடு சிந்தித்து ஒரு முடிவு எடுப்பது நல்லது.

நேருவும், பட்டேலும் ஒப்புக்கொண்டதும் பாகிஸ்தானும் ஐநாவும் ஏற்றுக்கொண்டதுமான வாக்கெடுப்பு என்ற ஒரே முடிவைத் தவிர காஷ்மீர் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு ஏதும் இல்லை.

ஆனால் இந்த வரலாறுகள் மறைக்கபட்டு தேசபக்தி என்னும் ஆயுதத்தை வைத்து சாமானிய மக்கள் மனதில் பாகிஸ்தானை எதிரி நாடாக சித்தரித்து, பாகிஸ்தானை அழிப்பது தான் தீர்வு என்பது போல் விஷம கருத்தை பதிய வைத்து உள்ளது இந்திய ஒன்றியம். இதற்கு எந்த அரசும் விதிவிலக்கு அல்ல.

போர் வெளிச்சத்தில் அம்மக்களின் தீர்வு இல்லை.

அவர்கள் தீர்வு இருட்டுக்குள்ளும் இல்லை.
அவர்களுக்கான தீர்வு இருட்டடிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்த ஒன்றிய அரசு தீர்வை போர் வெளிச்சத்தில் தேடிக்கொண்டு நடிக்கிறது பார்ப்பவர்களை நம்ப வைக்க...
உலகின் மிக இலாபகரமான வர்த்தகம் ஆயுத வியாபாரம் !!
அயோக்கியர்களின் கடைசி புகலிடம் தேசபக்தி!
ஃபாசிஸ்ட்டுகளின் கடைசி ஆயுதம் போர்!!


இப்போது புரிகிறதா, நடப்பது போரா?
வடிவேலு சொல்ற மாதிரி பெரிய அக்கப்போராக அல்லவா உள்ளது.
ஒரு நாட்டின் வளர்ச்சி இது போன்ற அக்கப்போர்களில் இல்லை. ஆக்கப்பூர்வ செயல்பாடுகளில் தான் உள்ளது.

கெட்ட போரிடும் உலகை வேரோடு சாய்ப்போம்!!
போரில்லா உலகை படைப்போம்!!

இன்றைய அணு ஆயுத போரில் வெற்றி என்று ஒன்று இல்லை. இருவருக்குமே தோல்விதான். சேதாரம் யாருக்கு குறைவு என்பதை வைத்து வெற்றியைக் கணக்கிடுவது என்பது ஒரு மாயை.

**- மன்னை செந்தில் பக்கிரிசாமி**

(காஷ்மிர் வரலாறு இணையத்தில் இருந்து திரட்டப்பட்டது. முழுதும் என் எழுத்து அல்ல)




ஓவியம்
S. ஹரிதா
LKG
SBV பள்ளி

## வரலாற்றின் சுவடுகளில் ராஜமன்னார்குடி:

# பகுதி 2 - முதலாம் ராஜாதிராஜ சோழரும் மன்னார்குடியும்....

பொதுவாக ஒவ்வொரு அரசருக்கும் அவரது ஆட்சிக்காலத்தில் முக்கிய ஊர் என சில ஊர்கள் இருக்கும். அது அந்த மன்னர்களுக்கு பிடித்த ஊராகவோ அல்லது அவர்களது ஆட்சிக்காலத்தில் அரசியல் முக்கியத்துவம் பெற்ற ஊராகவோ இருக்கும். அப்படித்தான் முதலாம் ராஜராஜசோழருக்கு தஞ்சாவூரும், அவரது மகன் முதலாம் இராஜேந்திர சோழருக்கு கங்கைகொண்ட சோழபுரமும் திகழ்ந்தன.

இவர்கள் இருவருக்கும் அடுத்து அரசுக்கட்டில் ஏறியவர் முதலாம் இராஜாதிராஜர்; இவர் கங்கைகொண்ட சோழராம் முதலாம் இராஜேந்திரரின் புதல்வர் ஆவார். வரலாற்றின் பக்கங்களில் இவருக்கு முக்கிய பங்கு உண்டு. சிறந்த வீரர். தன் வாழ்நாளின் முக்கால்வாசிக்கும் மேற்பட்ட நாட்களை போர்க்களத்தில் கழித்து, சோழ பேரரசை நிலைநிறுத்திய மாவீரர்.

மேலைச் சாளுக்கிய மன்னன் ஆகவமல்லனுடன் கி.பி.1054ம் ஆண்டு நடந்த கொப்பம் போரில், போர்க்களத்திலேயே யானை மேலிருந்து வீர மரணம் அடைந்து, ’யானை மேல் துஞ்சிய தேவர்’ என பட்டம் பெற்ற வீராதி வீரர் (இவரது காலத்துக்கு முன் வாழ்ந்த இராஜாதித்த சோழரும் தக்கோலம் போரில் யானையின் மேல் இருந்து உயிர் துறந்து யானை மேல் துஞ்சிய தேவர் என அழைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது).

அப்படிப்பட்ட மாவீரர் கங்கைகொண்ட சோழபுரத்தை தலைநகராக கொண்டு ஆட்சி செய்து வந்திருந்தாலும், அவரது ஆட்சிக்காலத்தில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஓர் ஊராக நம் மன்னார்குடியே திகழ்ந்துள்ளது என நினைக்கத் தோன்றும் அளவுக்கு வரலாற்றில் சான்றுகள் கொட்டிக் கிடக்கின்றன.

முதலாம் இராஜாதிராஜ சோழர் காலத்தில் மன்னார்குடி மிகுந்த சிறப்புடன் இருந்துள்ளது. ஊர் பெயரில் தொடங்கி, கோவில்கள், வாய்க்கால்கள் என அனைத்தும் அவர் பெயராலேயே அந்த காலத்தில் அழைக்கப்பட்டு வந்துள்ளன. இந்த ஊரே அவரது பெயரால், ’இராஜாதிராஜ சதுர்வேதிமங்கலம்’ என்று அழைக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமின்றி அவரது ஆட்சியில், இந்த ஊருக்கு ’தனியூர்’ என்ற சிறப்பு அந்தஸ்தையும் வழங்கியுள்ளார். மன்னார்குடியில் உள்ள ஸ்ரீ ராஜகோபால சுவாமி திருக்கோவில் ’இராஜாதிராஜ விண்ணகரம்’ என்றும், ஜெயங்கொண்ட நாதர் கோவில் இராஜாதிராஜ சோழரின் சிறப்புப் பெயர்களுள் ஒன்றான ஜெயங்கொண்ட சோழன் என்ற

பெயரை வைத்து 'ஜெயங்கொண்ட சோழீச்சரம்' என்றும், கைலாசநாதர் கோவில் 'ஸ்ரீ கயிலாசமுடையாரான ராஜாதிராஜீசுவரமுடையார்' திருக்கோவில் என்றும் அழைக்கப்பட்டுள்ளன.

ஜெயங்கொண்ட நாதர் கோவில் தற்பொழுது மன்னை நகர் அருகிலும், கைலாசநாதர் கோவில் புதுப்பாலம் பகுதியிலும் அமைந்துள்ளது. இந்த ஊர் பிடாகையான (பிடாகை - பெரிய கிராமம் அல்லது நகரத்திற்குள் அடங்கிய சிற்றூர்) சோழநல்லூரில் இரு வாய்க்கால்கள் இராஜாதிராஜரின் பெயரால் அழைக்கப்பட்டுள்ளன; அவை இராஜாதிராஜவதி வாய்க்கால் மற்றும் ஜெயங்கொண்ட சோழ வாய்க்கால் என்பன ஆகும்.

இதை எல்லாம் வைத்துப் பார்க்கையில், தஞ்சாவூரும், கங்கைகொண்ட சோழபுரமும் முறையே ராஜராஜருக்கும் இராஜேந்திரருக்கும் முக்கிய ஊர்களாக திகழ்ந்தது போல், நம் மன்னார்குடி இராஜாதிராஜருக்கு முக்கிய ஊராக திகழந்துள்ளது என்ற ஒரு ஊகமான முடிவிற்கு நாம் வர இயலும்.

தகவல் : திருவாரூர் மாவட்ட தொல்லியல் வரலாறு

எழுத்தாக்கம் :
அபிராமி பாஸ்கரன்



**மன்னையின் வரலாறு தொடரும்...!**



**மு.அன்புதங்கம்,**
ஏழாம் வகுப்பு,
அரசு உயர்நிலை பள்ளி,
துளசேந்திரபுரம்

# நாம் தொலைத்த தோழர் முகிலன்



மகாலெட்சுமி

எங்கே முகிலன்? எங்கே முகிலன்? என்ற முழக்கங்கள் ஒருபுறம் மெல்ல நம் செவிகளில் ஒலிக்க, யாருடா அந்த முகிலன், எதற்காக அவரைத் தேடுகிறார்கள், அவரவருக்கு ஆயிரம் வேலைகள் இருக்கையில் இவர்களுக்கு வேறு வேலையில்லை என்று கூறுபவர்கள் ஒருபுறம் இருக்க, எவன் செத்தால், பிழைத்தால் நமக்கென்ன, நம் குடும்பம் நம் குழந்தைகள் நலம் மட்டும் போதுமென்று சிலர் இருக்க, கற்பனை கதைகளில் கதாபாத்திரங்களாக வருபவர்களை கடவுளென நினைத்து அவர்களை சமூகப் போராளிகளென பாவித்து பாலாபிசேகங்கள் நிகழ்த்தும் கூட்டங்கள் ஒருபுறம் எனப் பெரும்பாலும் தன்னலத்துடன் வாழும் மக்களுக்கிடையே தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இவற்றை எல்லாம் நாம் அறியாமை என்று கூறுவதா? இல்லை, ஒருவித மோகம், மக்களின் அலட்சிய நிலை என்று கூறுவதா? எதுவாக இருப்பின் என்ன? நம்மில் ஒருவருக்கு கூட நம்முடன் வாழும் மற்ற மனிதர் மீது எந்த ஒரு அக்கறையும் கிடையாது. அனைவருமே தனது வலியினை ஏற்க மறுக்கின்றனர். ஆனால் சக மனிதருக்கு அதே வலியைக் கொடுப்பதில் துளியும் வருத்தமின்றி வாழ்கின்றனர். இவ்வளவு ஈனமான பிறவியா இந்த மனிதப் பிறவி என்று என்னும் அளவிற்கு! இவற்றையெல்லாம் நினைக்கையில் மிகவும் அருவருப்பாக உள்ளது மனிதனாய் வாழ்வதற்கு!

ஏன் இவ்வளவு கோபம்? எதற்காக மனிதனாய் வாழ்வதற்கு வருத்தப்படுகிறேன் என்று நினைத்தீர்களானால் தொடர்ந்து படியுங்கள்.

கடந்த பிப்ரவரி 15 ம் தேதி முகிலன் என்ற ஒரு சுற்றுசூழல் ஆர்வலர் காணாமல் போயிருக்கிறார். இது குறித்து ஒருசிலர் தனது முகநூல் பக்கத்தில் இவரைப் பற்றிய செய்திகளைப் பகிர்ந்து வந்தனர். ஆனால் பலருக்கு இவர் யார் என்றே தெரியாது. நான் உட்பட. இவரை குறித்து பகிரப்பட்ட ஒரு சில செய்திகளும் இவர் காணவில்லை என்ற செய்தியும் மனிதாபிமான அடிப்படையில் இவர் யார் என்று தெரிந்துகொள்ளத் தூண்டியது. இவரைப் பற்றி தெரிந்துகொள்ள விரும்பி கூகுளில் இவரைப் பற்றி சில விடயங்களை தெரிந்துக் கொண்டேன். மிகவும் அதிர்ச்சியாக இருந்தது. இவரைப் பற்றி உடனடியாக ஒரு கட்டுரையை என் முகநூல் பக்கத்தில் பகிர்ந்தேன். நாம் அனைவரும் தான் மிகவும் நல்லவர்கள் அல்லவா! நமக்கு இழைக்கப்படும் அநீதியை பற்றி பக்கம் பக்கமாக பேசுவோம்.
ஆனால் அச்செய்தியை கடந்து சென்றோரே பலர். அதைப் படித்து புரிந்து வெகுசிலர் அவருக்காக தனது முழக்கங்களையும், ஆத்திரங்களையும் தங்களது சமூக வலைதளங்களில்

தெரியப்படுத்தி இருந்தனர். வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் சிலரும் அவர்களது ஆதரவைத் தோழர் முகிலனுக்காக தெரிவித்தனர். எனினும் நாம் அனைவரும் நமது வேலைகளில் பரபரப்பாக இயங்கி கொண்டிருக்கிறோமே தவிர இவரைப் பற்றி பேசுவதற்கு நமக்கு நேரமில்லை. அவரும் தன் குடும்பம், தன் குழந்தை, அரசு வேலையில் கை நிறைய சம்பம் என்று சந்தோஷமாக இருந்திருக்கலாமே? எதற்காக மக்களின் வாழ்வாதாரத்திற்காக போராட வேண்டும்? தன குடும்பத்தின் வாழ்வுதனை தவிக்கவிட வேண்டும்?

தோழர் முகிலன் ஈரோட்டின் அருகிலிருக்கும் சென்னிமலையைச் சேர்ந்தவர். விவசாயக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். நம் மண்ணின் வளங்களைக் காப்பதற்காகத் தான் பார்த்துகொண்டிருந்த அரசு வேலையைத் துறந்து முழு நேரம் மக்கள் சேவையில் ஈடுபட்டார். ஆற்றுப்படுகையில் அரசின் ஆதரவுடன் நடக்கும் மணல் கொள்ளையை தட்டிக் கேட்டார். சாயப் பட்டறை கழிவுகள் நொய்யல் ஆற்றில் கலப்பதை எதிர்த்துப் போராடினார். மேலும் ஸ்டெர்லைட் ஆலை, கெயில் எரிவாயுத் திட்டம், கூடங்குளம் அணுமின் நிலையம் போன்ற சுற்றுசூழலுக்கு கேடு விளைவிக்கும் பல திட்டங்களை எதிர்த்து போராடியவர் தோழர் முகிலன்.

இதுபோன்ற போராட்டங்களை நாம் திரையில் திரைப்படமாகவே கண்டு பழகி விட்டோமல்லவா? அதனால் தான் என்னவோ இந்த நிஜத்தினை மனம் ஏற்க மறுக்கிறது. இவரும் திரைப்படத்தில் நடிக்க மட்டும் செய்திருந்தால் இவரையும் தூக்கி வைத்துக் கொண்டாடி இருப்போம். இவருக்கென சில தற்கொலைகளும் அரங்கேறியிருக்கும். ஊர் போர்க்களமாகி எப்படியேனும் இவரை கண்டுபிடிக்க சில முயற்சிகளேனும் எடுக்கப்பட்டிருக்கும். தொலைக்காட்சிகளிலும் செய்திகளிலும் 24 மணி நேரமும் காரசார விவாதங்கள் நடந்திருக்கும். படங்களை படமென பாராமல் மோகத்தில் ஊறி கோவிலும், ரசிகர் மன்றங்களும் கட்டிப் பாழாகும் சிலர், படத்தினை நிஜமென நம்பி நாட்டை ஆள அனுமதிக்கும் சிலர். இதை எடுத்துக் கூறினால் நம்மை முட்டாளென கூறும் நாடு. இதில் எங்கிருந்து வரும் நல்லாட்சி? நல்ல மக்கள் வாழும் இடத்திலேயே நல்ல ஆட்சி உருவாகும் வாய்ப்பு அதிகம்.

ஆனால் இவரோ துளியும் நன்றியே இல்லாத நம்மை போன்ற மனிதர்களுக்காக போராடி ஆபத்தில் சிக்கிக் கொண்டார். இன்று இவரை ஒரு பொருட்டாக கூட மதிக்காமல் கடந்து செல்பவர்களும் இருக்க தான் செய்கிறார்கள்.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக போராடிய 13 பேர் கொல்லப்பட்டபோது பொங்கி எழுந்த பலர் இன்று வாய்மூடி நிற்பது ஏனோ? இதுகுறித்த ஆதாரங்களை வெளியிட்டு செல்லும்போது தான் தோழர் முகிலன் தொலைந்து போனார். இவர் உயிருக்கு ஏதேனும் ஆபத்து எனில் நம்மில் ஒவ்வொருவரும் தான் பொறுப்பு. நாம் இன்றும் சாதி மதம் என்று சண்டையிட்டு கொண்டிருக்கிறோம். ஆனால் ஆங்கிலேயரைக் காட்டிலும் ஆபத்தான நம் அரசியல்வாதிகள் பெருநிறுவனங்களுக்கு நம் மண்ணின் வளத்தையும் மக்களின் வளர்ச்சியையும் கூறுபோட்டு விற்றுக் கொண்டிருக்கின்றனர். நாமும் கை கட்டி வாய்பொத்தி பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதில் யார் மீதும் குறைகூற நமக்குத் துளியும் தகுதியில்லை. காசுக்கு ஓட்டை விற்றோமல்லவா? ‘‘உப்புத் தின்றவன் தண்ணீர்

குடித்துத்தானே ஆகவேண்டும்?!“

மக்களுக்கென வாழும் நல்லோரை
கல்லெனக் கூட மதியதோர்
திரை மோகத்தில் மூழ்கி அதுவே
நிஜமென நம்பும் இளையோர்
தட்டிக் கேட்க நினைக்கும் பெண்களை
தலையில் கொட்டி வீட்டில் முடக்கும் சமூகம்,
காசுக் கொடுத்தால் போதும், ஓட்டையும்
நாங்கள் விற்போம் எங்கள் நாட்டையும்
எழுதிக் கொடுப்போம் என்ற மக்கள்.
தன் மக்கள் தன் மனைவி தன் குடும்ப
நலன் மட்டும் கருதி வாழும் தன்னலவாதிகள்,
தேர்தல் சமயங்களில் காலிலும் விழும் ஆட்சியாளர்கள், இதில் நல்லாட்சி என்றொன்று எப்படி அமையும்?!

தோழர் முகிலன் நலமுடன் திரும்ப அனைவரும் பிரார்த்திப்போம். அவரைப் பற்றிய செய்திகளை அதிகம் பகிர்ந்து அனைவரும் அறிய செய்வோம். மனிதர்களாய் வாழ்வோம்! மனிதநேயத்துடன் வாழ்வோம்!

- மகாலெட்சுமி சிவானந்தம்

---

# செயல்



- ஜெ.ஜவஹர்
மன்னை

நாம் ஒரு பணியைச் செய்யும் போது அதிலுள்ள பளுவைப் பார்க்கிறோம்.

நாம் அதே பணியை சுலபமாக்க பார்க்க வேண்டுமென்றால், நாம் இப்போது கற்றுகொள்கிறோம் என்ற மனநிலை வரவேண்டும்.

நாம் புதிதாக ஒன்றை கற்றுகொள்ளும் போது வரும் ஆர்வம், நாம் அதை நேசித்தால் போதும். எதுவும் எளிது!

இவையனைத்திலும் செயல்திறன் போதும்.

# முடிவில்லா கவிதைகள்

நெருக்கமாய் நீ,
உருக்கமாய் நான்,
சுருக்கமாய் என் கவிதைகள்!

எளிமையாக கவிதை சொல்ல
என் ஆழ்மனதை தீண்டவேண்டுமா நீ?
உன் கண்கள் எனை நோக்கினால்
போதாதா!
உயிர் தூண்டிடும் கவிதை ஒன்றை
எழுதிட உன் உதவி வேண்டும்.

உன் இதழ் மை கொண்டு என்
இமைகளில் கற்பனையை வார்த்திடு!
யார் செய்த புண்ணியமோ,
உன்னிடம் சரணடைந்தாயிற்று

நான் மட்டுமல்ல என் கவி வரிகளும்
தான்!
நீ இல்லாமல் ஏது காதல்?
நீ இல்லாமல் நான் எழுதும் கவிதைகள்
ஏது!
அன்பே நீ தான் என் பெரும் கவிதை,
அதனால் உன் இதயத்தை துளையிட
நினைத்தேன்
என் கற்பனை எழுதுகோல் கொண்டு

உன் ஓரப்பார்வை பட்டதும் என் உடல்
முழுவதும் கவிதை ஆனது!
நீ படிக்கத் தொடங்கியதும் உடலின்
உயிர் களவு போனது...
நெல்லோடு சேர்ந்து புல்லும் வளர்வது
போல
காதலோடு சேர்ந்து கவிதையும்
வளர்கிறதே!

வாசிக்க மட்டுமே தெரிந்த என்னை
வர்ணிக்கவும் செய்தது நீயடா!...
என் எண்ண சிறகுகளை விரிக்க
உன் சின்னப் புன்னகை போதும்!

நீ வாசிக்கத் தொடங்கினாய்,
என் வரிகள் சுவாசிக்கத் தொடங்கியது!
தொடர்ந்து வாசி....
என் வரிகள் முடிவில்லா கவிதைகளாக
தொடரட்டும்...

- பொன்மணி தர்மராஜன், BE.,
பரவாக்கோட்டை.



R. ராஜ சூர்யா
3 ஆம் வகுப்பு
தரணி மெட்ரிக்குலேசன் பள்ளி
மன்னார்குடி

# உங்களுக்குத் தெரியுமா!!!



பா.தமிழரசி


மகாபாரதத்தை எழுதிய(வர்) வேதவியாசர் என்பர். சாலையில் நடந்து வரும் பொழுது ஓரறிவு உயிர் ஊர்வனவான மண்புழு ஒன்று அதற்குரிய மிகுந்த வேகத்துடன் நடைபாதையை கடக்க முற்பட்டது. அதனை உற்று நோக்கி கவனித்த வேத வியாசர் என் இவ்வளவு வேகமாக செல்கிறாய் என்று கேட்டார்? அதற்கு மண்பூழு நடைபாதையில் வாகனங்கள், மனிதர்கள் என பல செல்கின்றன.

அவர்களின் கால்களிலோ (அல்லது) வாகன சக்கரங்களிலோ நான் நசுக்கப்பட்டு இறந்து விடுவேன்! என் உயிரை பாதுகாத்துக் கொள்ள வேகமாய் செல்கிறேன் என்றது. அதைக் கேட்ட வேதவியாசர், புன்னகையுடன் நீ வாழ்வதால் என்ன பயன் என்று கேட்டார்!

அதற்கு மண்புழு, நான் வாழ்வதற்காக இறைவன் இந்த உயிரை எனக்கு தந்துள்ளார். அவரால் மீண்டும் எடுக்கப்படும் வரை நான் வாழ்வேன் என்று வியப்பாய் பதில் கூறியது!

வாழ்க்கையில் எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்பதற்கு மாறாக, எவ்வாறு படைக்கப்பட்டாலும் வாழ்வுண்டு என்பதை நிரூபிக்கிறது மண்புழு.

---




சுபதர்ஷிகா ரவிக்குமார்
கே.கே.நகர்,
சென்னை

# எண்ணங்களின் வலிமை

நம் மனதில் ஒரு நாளில் சராசரியாக 70,000 எண்ணங்கள் வரை எண்ணுகிறோம் என ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். நாம் நினைக்கும் ஒவ்வொரு எண்ணங்களுக்கும் வலிமை இருக்கிறது.

இதனால் நாம் கவனிக்க வேண்டிய விசயம் என்னவென்றால், நேர்மறை எண்ணங்களை Positive Thinking மட்டுமே அதிகமாக நினைக்க வேண்டும். பொதுவாக நாம் கூறும் வார்த்தைகளையே கவனித்துப் பேச வேண்டும். நம்மைப் பார்த்து தான் அடுத்த தலைமுறைக் கற்றுக் கொள்கிறார்கள்.

''பொய் பேசாதே'', ''தீமை செய்யாதே'', ''கோபப்படாதே'' இவ்வாறு எதிர்மறையாக கூறாமல்,

''உண்மையை பேசு'', ''நன்மை மட்டுமே செய்'', ''அன்போடு இரு'' இது போல நேர்மறை வாக்கியங்களை மட்டுமே கூறிக் கொண்டே இருந்தால் மட்டுமன்று, அவற்றை நாம் செயலாக்கும்போது அது அவர்கள் மனதிலும் பதிந்து அவர்களும் நன்மை பற்றியே நேர்மறையாக பேச ஆரம்பிப்பார்கள்.

அடிக்கடி ''நம்மால் எல்லாம் முடியும்'' என்று நான் என் மாணவர்களுக்கு கூறிக் கொண்டே இருப்பேன். அவர்கள் வாழ்வில் வெற்றி பெறுவார்கள் என நான் நம்புகிறேன். என் நம்பிக்கை நிறைவேறும். உங்கள் நம்பிக்கையும் நிறைவேறும். முயன்று பாருங்கள்.



ரோசி (ஆசிரியை)



ஆ.லெட்சுமி நாராயணன்

7ஆம் வகுப்பு அ பிரிவு, மணிமேகலை நடுநிலைப் பள்ளி
மன்னார்குடி

# மனிதி


கனிமொழி

‘ஏன்மா? எப்பயும் 7 மணிக்கெல்லாம் ரூம் போயிட்டேன்னு ஃபோன் பண்ணுவ... இன்னைக்கென்ன 10 மணிக்கு கூப்புடற?? ரூம்க்கு போய்ட்டியா இல்லையா?? இன்னைக்கு ஆஃபீஸ்ல ஒர்க் அதிகமா?’ என தன் மகள் தன்னை விட்டு தூரத்தில் வேலை செய்து கொண்டிருப்பதால் தாய்மைக்கே உரிய பயத்துடனும் பரிவுடனும் சுலேகாவிடம் வினவினார் அங்கையற்கண்ணி..

‘ஒர்க்கெல்லாம் இல்லம்மா.. சொல்லியிருந்தேன்ல இன்னைக்கு சாயந்திரம் ஆஃபீஸ்ல இருக்க எல்லாரும் டீம் டின்னர்னு வெளிய சாப்டப் போறோம்னு... அதான் மா... சாப்ட்டுட்டு அங்க இருந்து வர்றதுக்கு இவ்ளோ நேரம் ஆய்டுச்சு மா.. வேற ஒன்னுமில்ல.. நடுவுல உனக்கு கால் பண்ணனும்னு நெனச்சேன்.. மறந்துட்டேன்.. சரி.. நீ சாப்ட்டியா இல்லையா?? அப்பா எங்க?’ என தன் தாயாரின் மனோபாவம் அறிந்து அவளிடம் அன்றைய நாள் என்ன நடந்தது என்பதை பதமாக கூறினாள் சுலேகா..

‘நாங்க சாப்ட்டோம்டா.. அப்பா நியூஸ் கேட்டுட்டு இருக்காரு.. இருடா தரேன்..என கைப்பேசியை மாற்றினார் அங்கையற்கண்ணி..

தந்தையும் வெளியே காட்டிக்கொள்ளாமல் இருந்தாலும் மகள் இவ்வளவு நேரம் தவறி பேசுவதற்கான காரணத்தை மற்றோரு முறைக் கேட்டு மனதை ஆசுவாசப்படுத்திக் கொண்ட பிறகு தான் அக்கைப்பேசியினை அணைத்தார்..

பெற்றோரிடம் பேசி கொண்டிருந்த தன்னையே பார்த்துக் கொண்டிருந்த தன் தோழி நித்யாவை நோக்கி என்ன என்பது போல் கண்ணசைத்தாள் சுலேகா..

‘இல்ல... ரிட்டர்ன் வரும்போது பஸ்ல வந்த மாதிரி சொன்னியே.. ஆனா நீ சந்தோஷ் கூட பைக்ல தான வந்த.. நானும் அரவிந்த் கூட தான வந்தேன்.. அதான் பாத்தேன்..’ என்றாள் நித்யா..

‘ஏன்டி.. எங்க வீட்ட பத்தி உனக்கு தெரியாதா?? ஸ்கூல், காலேஜ் படிக்குறதுல இருந்தே பசங்க பிரண்ட்ஷிப்லாம் இருக்க கூடாதுன்னு சொல்லாம சொன்னவங்க டி..இப்ப அவங்கள விட்டு இவ்ளோ தூரம் தள்ளி வேற இருக்கேன்..அதுவும் சென்னையில இருக்கேன்.. நைட் 10 மணிக்கு ஒரு பையனோட பைக்ல வந்தேன்னு சொன்னா தாம் தூம்னு குதிப்பாங்களோ இல்லையோ...நா என்னமோ பெரிய கொல குத்தம் பண்ணுன மாதிரியும் அதனால அவங்க மரியாத செதஞ்சு சின்னாபின்னமா போன மாதிரியும் பேசுவாங்க டி..அதான் சொல்லல’...

‘சரி சரி.. பிரஷ் அப் ஆய்ட்டு வா டி.. உனக்கு ஒரு இன்ட்டிரஸ்ட்டிங் போஸ்ட் ஒன்னு காட்றேன்,’ என்றாள் நித்யா..

‘அப்படி என்ன இன்ட்டிரஸ்ட்டிங்கான போஸ்ட்.. நீ மிஞ்சி மிஞ்சி போனா குழந்தைங்க வீடியோவையும், அனிமல்ஸ் வீடியோவையும் தான் பாப்ப.. எழுதியிருக்காங்கன்னா.. நீ படிக்கவே மாட்ட’,என கலாய்த்தப்படி அவளருகே அமர்ந்தாள் சுலேகா..

‘இல்லடி எனக்கு இன்னைக்கு ஏதோ ஞானோதயம் வந்து ஒரு போஸ்ட் படிச்சேன்… அதான் உன்ட்ட காட்டலாம்னு கூப்டேன்…இங்க பாரேன் யாரோ மனிதி-னு ஃபேஸ்புக் பேஜ்ல செம மெசேஜா போடறாங்க டி.. அப்படியே அப்பட்டமா எல்லா விஷயத்தையும் பேசுறாங்க..ஆண்மை, பெண்மை, திருநங்கை, சாதி, மதம், சமயம், காதல், நட்பு, தோல்வி, சந்தோஷம், துக்கம்னு பிரிச்சு மேஞ்சிருக்காங்க’, என்றவாறே தன் கைப்பேசியை சுலேகாவிடம் நீட்டினாள் நித்யா..

‘அதுலயும் பெண்ணியம்னு அவங்க போட்டுருக்க போஸ்ட் பாரேன்.. இரு இரு.. நானே படிச்சு காட்றேன்,’ என கொடுத்த கைப்பேசியை சுலேகாவிடமிருந்து பிடுங்கி கொண்டு படிக்க ஆரம்பித்தாள் நித்யா..

தன்னிடம் கொடுத்த கைப்பேசியை பிடுங்கியதைக் கூட பெரிதுப்படுத்தாமல் நித்யா படிப்பதை ஆர்வத்துடன் கேட்க ஆயத்தமானாள் சுலேகா…

’காந்திஜி சொன்ன மாதிரி மிட் நைட்ல நகையெல்லாம் போட்டுட்டு போறது பெண்ணியம் இல்ல.. சுடிதாரோ, ஜீன்ஸோ, சாரியோ போட்டுட்டு ரோட்ல போகும் போது ஏதோ ஒரு பொருள பாக்குற மாதிரி உச்சி முடில இருந்து உள்ளங்கால் வர பாக்காம இருக்கணும்.. குண்டோ, ஒல்லியோ, கருப்போ, செகப்போ எப்படியிருந்தாலும் நக்கலான பார்வை இல்லாம இருக்கணும். தன் தாயோ, தமக்கையோ, தங்கையோ, தோழியோ, காதலியோ, மனைவியோ அவரவர் விருப்பம் போல செயல்பட விடனும். தகுதிக்கு மீறியதாய் இருந்தால் தகுந்த அறிவுரைகள் கூறி நல்வழிப்படுத்தலாம் (இது இரு சாரோர்க்குமே)..

சமூக வலைதளங்களில் மட்டுமே பெண்மையைப் போற்றி விட்டு அல்லது அவ்வாறு போற்றி எழுதப்பட்ட பதிவிற்கு லைக்குகளையும் ஹார்ட்டின்னையும் பறக்க விட்டு, பேருந்தில் தன்னருகே நிற்கும் பெண்ணின் மார்பகத்திற்கான மதிப்பெண்கள் போடாமல் இருக்க வேண்டும்.. ஹார்மோன்களின் தாக்கம் என்ன செய்வது என நீங்கள் எதிர் கேள்வி கேட்டால் அதே ஹார்மோன்களின் தாக்கத்தில் மாதம் மூன்று நாட்களுக்கு உகந்த நண்பனாய் விளங்கும் நாப்கின் வாங்க வரும் மகளிரை ஏற இறங்க பார்ப்பது ஏன் எனும் கேள்வி பல பெண்களின் வாய்வரை வந்து இறந்து போனவை தான்.. எப்படி ஒரு ஆண் பிறந்து, வளர்ந்து, படித்து, தக்க வேலை செய்து, மணமுடித்து, குடும்பத்தினை நடத்தி, ஆடி அடங்கி ஒடுங்கிப் போய் ஓய்கிறானோ அவ்வாறே

பெண்ணும்.. ஆண் எனும் இடத்தில் பெண் என்னும் சொல். மற்றபடி டிட்டோ தான்... பெண் தனியாக சென்றால் சமுதாயத்தில் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம் என செய்தித் தாள்களிலும் தொலைக்காட்சியிலும் வரும் செய்திகளுக்கு கமண்ட்டுகள் சொல்லியும் பதிவுகளாய் பறக்கவிட்டும் இருக்கும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தெரிய வேண்டும் தனித்து நடைப்போட்ட பெண்ணிற்கு அநீதியிழைத்த அச்சமுதாயத்தில் தான் நாமும் ஒரு அங்கமாய் இருக்கிறோம் என்ற அறிவுக் கதவு அகலமாய் திறக்க வேண்டும் என இறைவனிடம் கேட்கிறேன் கைக்குலுக்கலிலோ, ஆரத்தழுவதிலிலோ, கண்ணீர் துடைப்பதிலோ, சாய்வதற்கு தோள் தருவதிலோ, இளைப்பாற மடி தருவதிலோ, மாதவிடாய் காலத்தில் தேவையறிந்து நாப்கின்கள் வாங்கி வருவதிலோ, உடன் பணி புரிவதிலோ, இருட்டினாலும் பயணிப்பதாலோ பெண்ணியம் பூர்த்தியாகாது... இவற்றுடன் சக மனிஷியாய், சக உயிராய் காண்பதிலும் நேசிப்பதிலுமே பெண்ணியம் நிறைவுப் பெறுகிறது.. பெண்ணியம் ஆண்மையுடன் நிறைவுப்பெறட்டும்..

அகமகிழ்ந்த அன்புகளுடன் உங்கள் மனிதிஞீ,' மூச்சு வாங்க படித்து முடித்த தன் தோழிக்கு சிரித்தவாறே தண்ணீர் பருக கொடுத்தாள் சுலேகா..

'பாத்துப்பா...மூச்சு முட்டி செத்துடப் போற தண்ணியக் குடி.. அப்பறமா பேசலாம்'...

சுலேகா வழங்கிய நீரை சொட்டு விடாமல் குடித்த நித்யா...பாருப்பா.. செமயா எழுதியிருக்காங்கல்ல.. இரு ஒரு கமெண்ட போட்டுட்டெ வந்துடுறேன்...

'ஆவ்சம் ரைட்டிங்.. அருமை' என கமெண்ட் கொடுத்த நித்யா.. சரிப்பா.. நீ போய் தூங்கு.. எனக்கும் தூக்கமா வருது.. நாளைக்கு ஆஃபீஸ்கு சாரில போகனும்.. காலைல நீ தான் எனக்கு அட்ஜஸ்ட் பண்ணி விடனும்..இல்லண்ணா அந்த ராகவன் இருக்கான்ல எப்படா சாரி விலகும்னு பாத்துட்டே இருப்பான்.. அவன் முன்னாடி பாத்து நடக்கனும் பக்கிப்பய... சரி சுலோ.. மறந்துடாத.. நீ பாட்டுக்கு சீக்கிறம் ஓடிராத.. குட்நைட்... ஸ்வீட் டிரீம்ஸ் டியர்', என தன் உறக்கத்துடன் காதல் புரிய தொடங்கினாள் நித்யா..

வாட்ஸாப்பில் தான் இன்றெடுத்த ஃபோட்டோக்களை பதிவிட்டதற்கு தன் பெரியப்பா மகனின் முகசுளிப்பான் ஸ்மைலிக்கான காரணத்தை கேட்டப் பொழுது... ஏன் சுடிதார்ல போல?? ஜீன்ஸ், ஷர்ட் போட்டுட்டு தான் ஆஃபீஸ் போகனுமா?? நைட் வேற லேட்டா வந்திருக்கப் போல... பாத்து இருந்துக்க..அவ்ளோதான் சொல்ல முடியும் என்ற கேள்விகளுக்கு தக்கவாறு பதிலளித்து விட்டு ஃபேஸ்புக்கில் மனிதி என தான் தொடங்கிய பக்கத்தில் நித்யா அளித்த கமெண்டிற்கு நன்றி கூறி கைப்பேசியை அணைத்து உறக்கத்திடம் தஞ்சமடைத்தாள் சுலேகா

**– கனிமொழி**

# நான் யார்?


பிரகதீஸ்வரன். பா

அரக்க பறக்க கிளம்பி, ஏன் சாப்பிடுகிறோம், எதுக்கு சாப்பிடுகிறோம் என்று தெரியாமல் சாப்பிட்டு, புடிக்குதோ பிடிக்கலையோ வேலைக்கு போயிட்டு, அங்க இன்னிக்கி வேலை முடிஞ்சா போதும்டானு வேலைய முடிச்சு, மறுபடியும் வீட்டுக்கு வரும்பொழுது ஒரு போருக்கு போய்ட்டு வந்த மாதிரி இருக்கும், அந்த நேரம் என்ன வாழ்க்கைடா இது என்று தோன்றும்,

அலுவலகம் சென்று வேலை செய்பவர்கள் முக்கால்பங்கு மனிதர்கள் அனுபவிக்கும் பத்தில் ஒரு பங்கு செயல் தான் இவை, நாம் யார்? இவையெல்லாம் ஏன் நாம் செய்து கொண்டிருக்கிறோம் என்று ஒரு நிமிடம் யோசிக்க அநேக நேரம் முயற்சி செய்து இருப்போம்! ஆனால் அந்நேரம் அக்கணமே நினைவுக்கு வருவது பெற்றோருடைய மருத்துவ செலவு, தங்கச்சி கல்யாணம், தம்பி, தங்கை படிப்பு, வருங்காலத்திற்கான செலவு, சேமிப்பு, இன்னும் ஏராளம்.

ஆம் நான் இதையெல்லாம் செய்துதான் ஆக வேண்டும் என்று முடிவெடுத்து விட்டு இதுபோல் தினந்தோறும் விருப்பு வெறுப்பு இல்லாத வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு இந்தப் பதிவு சமர்ப்பணம்..

நீங்கள் ஒரு போக்குவரத்து நெரிசலில் சிக்கி இருப்பதாக எடுத்துக்கொள்வோம், உங்கள் அருகில் ஒருவர் உங்களைப் பார்த்து புன்னகையுடன் சிரித்தாலோ அல்லது அவர் மனதார சந்தோசமாக இருப்பதை நீங்கள் பார்த்தால் உங்கள் மனதுக்கு தோன்றுவது ஒரு சிறு நிம்மதி, அதே அவர் அந்த கணத்தில் உங்களை வேண்டா வெறுப்பாக பார்த்தால், நீங்கள் கடினமாக உணர்வீர்கள். இதைத்தான் ஆங்கிலத்தில் பாசிட்டிவ் வைப்ரேஷன், நெகடிவ் வைப்ரேசன் என்று அழைப்பார்கள். நீங்கள் எப்பொழுதும் பிறர் மீது அல்லது பிறரை பார்க்கும் பொழுதும் பேசும்பொழுதும் உங்கள் வார்த்தைகளோடும் உங்கள் பார்வைகளோடும் ஒரு தேக்கரண்டி அன்பைச் சேர்த்தால் உங்களைச்சுற்றி பாசிட்டிவ் வைப்ரேஷன் இருந்துக் கொண்டே இருக்கும். இந்த பாசிட்டிவ் வைப்ரேஷன் உங்களைச் சுற்றி இருப்பவர்களுக்கும் நன்மையை உண்டாக்கும்.

இது சக மனிதர்களுக்கு மட்டுமில்லாமல் நீங்கள் காலையில் பல் துலக்கும் முன்பு, பல் துலக்கியைப் பார்த்து ஒரு சின்ன சிரிப்பு அல்லது வணக்கம் சொல்லுங்கள், நீங்கள் சாப்பிடும் இட்லிக்கு உங்களுடைய காதலை தெரிவியுங்கள், நீங்கள் செல்லும் வாகனத்துடன் மகிழ்ச்சியோடு உரையாடுங்கள், சக மனிதர்களுக்கு உங்களுடைய அழகான சிரிப்பைக் காட்டுங்கள், உங்களை நீங்களாகவே பாராட்டிக் கொள்ளுங்கள், உங்களுடைய ஒவ்வொரு நிகழ்வுக்கும் நன்றி தெரிவியுங்கள், இவ்வாறு செய்தால் நீங்கள் செய்கின்ற வேலை உங்களுக்கு பிடிக்கும், நீங்கள் வீடு திரும்பும் பொழுது போருக்கு சென்று வந்தார் போல் தோன்றாது.

இவையெல்லாம் கடைப்பிடித்தால் உங்கள் வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கும் பொழுது ஆனந்தத்தில் திளைத்து ஒரு நல்ல ஆன்மாவாக வாழ்கிறோம் என்ற உணர்வு உங்களை சந்தோஷத்தில் திக்குமுக்காடச் செய்யும். நான் யார் என்ற கேள்விக்கு நீங்கள் யோசிக்க துவங்கினால் அதற்கான விடை இந்த செயல்களில் தான் ஒளிந்திருக்கிறது.

பாசிட்டிவ் வைப்ரேஷன் என்கின்ற பேரலை, நம்மை ஆனந்தத்திற்கு அழைத்துச் செல்லும் என்ற நம்பிக்கையுடன் என் பதிவை முடிக்கிறேன்.

நான் யார்
**பிரகதீஸ்வரன். பா**

---

# போதை போதை

பெறுபவளுக்கு
வலியின் போதை,

பெற்றவனுக்கு
மகிழும் போதை,

பிறந்தவனுக்குத்
தவழும் போதை,

வளர்பவனுக்கு
வறுமையில் போதை,

கற்பவனுக்குக்
காதல் போதை,

வென்றவனுக்குக்
களவும் போதை,

தோற்றவனுக்கு
மதுவில் போதை,

முகர்ந்தவனுக்கோ
மேனியில் போதை,

சிரிப்பவனுக்குச்
சிக்கல் போதை,

சிந்தையுடையவனுக்கு
உறக்கம் போதை,

அதிகாரம் கொண்டவனுக்கு
அடிமை போதை,

அடிமைப்பட்டவனுக்கு
ஆள போதை,

அனைத்தும் அறிந்தவனுக்கு
மூடர் போதை,

மூடர் கூட்டத்துக்கு
முன்னேறும் போதை,

மூச்சை விட்டவனுக்கோ
முச்சந்தியும் போதை!!!



- பெ.மேகநாதன்

# தேர்தல்...!

இதோ -
மீண்டும் ஒரு சதுரங்க ஆட்டம்!
சிப்பாய்களைப் பலிகொடுத்து
ராஜாவைக் காப்பாற்றும்
சகுனிகளின் சாதுர்யம்...!

புழு மாட்டிய
தூண்டில்களோடும்,
தானியங்கள் தூவிய
வலைகளோடும்,
காத்திருக்கின்றனர் -
காரியவாதிகள்,
எதிர்கால வருவாயைக் கணக்கிட்டு!
அரசியல் பங்கு சந்தையில்
முதலீடு செய்யும் அரசியல்
விற்பனர்கள்.

பணமூட்டைப் பந்தியில்
பறிபோன கொள்கைகள்.
தன் சொகுசு வாழ்க்கைக்காக,
எதிலும் சமரசமான
கூட்டணிகளின் கூடாரங்கள்!

படித்தும் பாமரனாய்,
தெருத் தெருவாய் கொள்கை முழங்கும்
அறியாமை தொண்டர்கள்!

மக்களின் மறதியை
மந்திரமாய் கொண்டு
துண்டுகளை துணிந்து
மாற்றிக்கொள்ளும் இரட்டை நாக்கு
நாயகர்கள்!

எல்லா பிணந்தின்னி கழுகுகளும்
வட்டமிட்டுக் குறிவைத்துக்
காத்திருக்கின்றன,
காசுக்கு விலை போனவனின்
காய்ந்த சதைகளை நோக்கி!

இந்த ஆட்டம் முடிந்தபின் -
வழக்கம் போல...
விலை போனவன்
விலா எலும்பு
முறிக்கப்படும்!

சீதைகள் இங்கே -
சிதைக்கப்படுவார்கள்!

கோப்புக்கள் எதுவும் காசின்றி நகராது!

ஓட்டுப் போட்ட
விவசாயியின்
ஒட்டிய வயிறுகளில்
ஈரத்துணிகள் சுற்றப்படும்!

இந்த நாட்டின் எஜமானர்கள் குற்றவாளி
கூண்டில் அடைக்கப்படுவர்...!
வறுமையும் ஏழ்மையும்
இங்கே சாகா வரம் பெறும்..!

இப்போதாவது
விடியுமா என்ற நம்பிக்கையோடு,
வாக்கு எந்திரத்தின் முன்னால்,
வெளிச்சத்தைத் தேடுகிறது
பாவப்பட்ட ஒரு கூட்டம்....!



முனைவர். சா.சம்பத்
மன்னார்குடி

# சில சொற்களுக்கு பின்னே சில வன்மங்கள்



நிரஞ்சன்
மன்னார்குடி

''ஒவ்வொரு சொற்களுக்கு பின்னும் ஒரு வர்க்கம் ஒளிந்திருக்கிறது'' என்று மாமேதை காரல் மார்க்ஸ் சொல்வார். ஆனால் சில சொற்களுக்கு பின்னே சில வன்மங்கள் ஒளிந்திருக்கிறது. மனிதன் என்றால் கோபம் வருவது இயல்பு. கோபத்தின் போது ஆத்திரத்துடன் வசைபாடுவதும் மனித இயல்பு. ஆனால் நாம் வசைபாட  பயன்படுத்தும் வசைச்சொற்களின் அர்த்தம் என்னவென்று பெரும்பாலும் நமக்கு தெரிவதே இல்லை. அதற்க்கு அர்த்தம் இருக்கிறதோ இல்லையோ, ஒரு வரலாறு இருக்கத்தான் செய்கிறது.

நமக்கு ஒருவர் மீது ஆத்திரம் வரும்போது ''நாதாரி நாயே!'' ''நாதாரிப் பயலே!'' என்றெல்லாம் திட்டுவோம். ஆனால் நமக்கு நாதாரி என்றால் என்னவென்று தெரியாது. நாதாரி என்பது மதுரை பகுதிகளில் பன்றி மேய்க்கும் போயர் இன மக்களை குறிக்கும் சொல். அவர்களை அவமானப்படுத்த சாதிய வன்மத்தோடு அச்சொல் வசைச்சொல் ஆக்கப்பட்டது. ஆனால் நாம் ''நாதாரித்தனம் பண்ணாலும் நாசுக்கா பண்ணனும்'' என்று நகைப்புகாக சொல்கிறோம். நாதாரித்தனம் என்பது பன்றி மேய்ப்பது தான். அது இழிவல்ல. மதிப்புமிக்க தற்சார்பு பொருளாதாரம்.

''கேப்மாரி'' என்றும் ''கேப்மாரித்தனம்'' என்றும் நாம் வசைபாடும் சொல் செங்கல்பட்டு பகுதியில் வாழும் குறிப்பிட்ட இனமக்களை குறிக்கும் சொல்.  வீரம் செறிந்த குறவர் இன பழங்குடி மக்களின் குலப்பெயர் ஆகும். யானைப் படைகளை எதிர்த்து நின்று போரிடும் காலாட்படைக்கு தான் கேப்மாரி என்று பெயர். ஆதியில் இவர்கள் வனங்களை காவல் காக்கும் காப்பு தொழிலை பகலிலும் இரவிலுமாக மாறி மாறி செய்து வந்ததால் காப்புமாரி என்று அழைக்கப்பட்டார்கள். அதுவே மருவி கேப்மாரி என்றானது.

ஆங்கிலேயர்கள் நம்மை ஆட்சி செய்தபோது தன்னை எதிர்ப்பவர்களை சில குறிப்பிட்ட சாதியினரை குற்றப்பரம்பரை என்று சொல்லி கட்டம் கட்டி வந்தது நமக்கு தெரியும். ஆனால் அதே போல் தங்களை எதிர்க்கும் சில சாதியினரை, சில நபர்களை known depredators (KD) என்று கட்டம் கட்டி வைத்திருந்தார்கள். அது தான் நாம் பயன்படுத்தும் கேடி என்னும் வார்த்தை. கேடி என்ற சொல் திருட்டுத்தனத்தை குறிக்கும் சொல் அல்ல, அந்நிய எதிர்ப்பை குறிக்கும் சொல்லாக தான் நாம் கருத வேண்டும். ''சரியான கேடிடா இவன்'' என்று சொல்வோம் அல்லவா! அது ஆங்கிலேயன் இன்னும் விரட்டப்படவில்லை என்பதை உறக்கசொல்வது போல் ஆகிறது.

அமெரிக்காவின் 39 வது அதிபராக இருந்தவர் ஜிம்மி கார்ட்டர். அமெரிக்காவின் இரு பெரும் கட்சிகளான ஜனநாயக கட்சி மற்றும் குடியரசுக் கட்சி ஆகியவற்றில் ஜிம்மி கார்ட்டர் ஜனநாயக கட்சியை சேர்ந்தவர். அவருடைய எதிரிகளான குடியரசுக்கட்சியை சேர்ந்தவர்கள் அவரை இழிவுபடுத்த ஒரு காரியத்தை செய்தார்கள். தங்கள் வீட்டு நாய்களுக்கு ‘‘ஜிம்மி‘‘ என்று பெயர் வைத்தார்கள். நாடு முழுக்க நாய்களுக்கு ஜிம்மி என்று பெயர் வைக்கும் பழக்கத்தை உருவாக்கினார்கள். தற்போது உலகம் முழுக்க ‘‘ஜிம்மி‘‘ என்பது நாய் பெயராக மாறி இருக்கிறது. இந்தியாவிலும் நாய்களுக்கு ஜிம்மி என்று பெயர் வைக்கிறோம். அமெரிக்கர்களின் வன்மம் எத்தகையது என்பதை இச்செய்தியே நமக்கு உணர்த்துகிறது.

‘‘தேவடியா‘‘ என்ற சொல்லின் வரலாறு சில வருடங்களுக்கு முன்பு நமகெல்லாம் தெரியாது. ஆனால் இப்போது தெரியாதவர் யாரும் இல்லை. தேவடியா என்றால் கடவுளின் பக்தைகள் என்பதை தற்போது அறிந்துகொண்டோம். ஆனால் இப்போது தான் இச்சொல் மிக கேலியாக ஆகபெரும் மோசமான வசைச்சொல்லாக பயன்படுத்தப்படுகிறது.

காரல் மார்க்ஸ் சொன்னது போல் ஒவ்வொரு சொல்லுக்கு பின்னாலும் ஒரு வர்க்கம் இருக்கிறதோ இல்லையோ, வரலாறு இருக்கிறது. சில சொற்களின் வரலாற்றில் வன்மம் படிந்திருக்கிறது. வன்மத்துடன் நாம் வசைபாட பயன்படுத்தும் சொற்களின் வரலாற்றில் ஒரு தனி வன்மம் ஒளிந்திருக்கிறது.

– நிரஞ்சன்



கிறிஸ்ட் போஸ்



ஓவியம்:
S. நிகிதா, LKG, SBV பள்ளி

# உயிர் இருக்கும் வரை மறவாதே பெண்ணே!!

உடலோடு உயிர்,
உன்னோடு நான் என்று
ஏழு திசைகளிலும் மங்கள மேளம்
கொட்ட மணபந்தலிட்டு இரு மனதை
ஒரு மணதாக்கி
மனைவியாக அமர்கிறேன் உன் இதய
கூட்டில்!

இதழ் சொல்ல மறந்தாலும்
என் இதயம் சொல்ல மறப்பதில்லை,
உன் மேல் உள்ள அன்பை!
உன்னுடன் வாழ வந்தேன்,
வாய்க்கால் வரப்பின் ஓரம்,
நெற்களஞ்சியம் மிக்க மண்வாகு,
மண்ணால் எழுப்பிய சுவர்கள்,
அதற்கு மணிமகுடம் ஏற்றிய
கூரைகள்,
பாட்டிசைத்த பாரதிராஜா,
அந்த மரக்கிளை குயில்,
உன் அரண்மனை வந்தடைந்தேன்!

வரவேற்ற புதுமுகம்,
புதுமனையில் அமர,
பூத்து குலுங்கும் உன் தோட்டத்தில்,
புதிதாய் பூத்த மலர் நான்,
பறிப்பதற்கு நீ!

பட்டினி கிடந்ததில்லை,
பஞ்சு மெத்தை கேட்டதில்லை!
பழைய துணி அணிந்ததில்லை,
மணந்தவன் இட்ட பந்தலில் முழு
மனதோடு வாழ்கிறேன்,
மரணம் என்று ஒன்று வரும் வரை!

மறக்காமல் வெறுக்காமல் இருப்பேன்,
மன்மதன் மனம் புண்பட பேச
மாட்டேன்,
மரணித்தாலும் வேறொரு உறவை
தேட மாட்டேன்,
மல்லிகை பூக்களாய் மணம்
பரப்புவேன்,
மருமகள் என்ற பெயரை
மகளாக்குவேன்!

மணம் இணைய வாழ்வோம்,
மரணம் நம்மை பிரித்தாலும்,
மனம் பிரியாமல் வாழ்வோம்!



பா.எழிலரசி
முதலாம் ஆண்டு புவியியல் துறை,
அ.வீரையா வாண்டையார் நினைவு
ஸ்ரீ புட்ப்பம் கல்லூரி,

# 2019 - பாராளுமன்ற பொதுத்தேர்தல் எதிர்பார்ப்புகள் மற்றும் சில கருத்துக்கணிப்புகள்



சதீஷ் செல்வ குமார்

மிகவும் பரபரப்பான அரசியல் சூழலில், அடுத்த ஐந்தாண்டை தன் கணக்கில் எழுதிவரும் கட்சி எதுவென பொதுமக்களிடம் மிகுந்த எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த ஓரிரு ஆண்டுகளில் ஏற்பட்ட அரசியல் நடவடிக்கைகளை கருத்திற்கொண்டு இவ்வாய்வு நிகழ்த்தப்பட்டுள்ளது.

மக்களவை தேர்தலில் இடம்பெறும் 543 தொகுதிகளில் எக்கட்சிகளும் எக்கூட்டணிகளும் கைகோர்க்கும். வலு சேர்க்கும் என்பதை விட முக்கியமானதாக கருதப்படுவது, கடந்த மக்களவை தேர்தலுக்கு பின் நிகழ்ந்த நிகழ்வுகள் எவ்வாறு தற்போதைய மத்திய அரசை பாதித்துள்ளன என்பதாகும். குறிப்பாக பணமதிப்பிழப்பு நடவடிக்கை மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி (GST) நடுத்தர வர்க்கத்தினரையும் தொழில்துறையினரையும் பி.ஜே.பி மீது அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்றே கொள்ளவேண்டும்.

தற்போதைய 545 மக்களவை உறுப்பினர்களுள் 269 பி.ஜே.பி. உறுப்பினர்கள் இருப்பது கடந்த மக்களவை தேர்தலில் பி.ஜே.பி. முன்வைத்த வாக்குறுதிகளுக்கே அன்றி, இம்முறையும் அது பயனளிக்கும் என்று கொள்வதிற்கில்லை.

எதிர்பார்க்கப்படும் வெற்றி வாய்ப்புகள்:

அதிக (80) மக்களவை தொகுதிகளை கொண்ட மாநிலமான உத்திர பிரதேசத்தில் கடந்த 2017 மாநில பொதுத் தேர்தலில் யோகி தலைமையிலான பாரதிய ஜனதா கட்சி ஆட்சியில் அமைந்தது. 2011 சென்சஸ் கணக்கெடுப்பின் படி 79.73% கிந்துக்கள் வாழும் பூமியான உத்திரபிரதேசத்தில் இந்து நலனை முன்னிறுத்தி ஆட்சி நடத்திவரும் பாரதிய ஜனதா கட்சி எத்தகைய கூட்டணியுமின்றி தன் வெற்றி வாகையை சூடி வரும் என்பதில் ஐயமில்லை. மேலும் இம்மாநிலத்தில் அதிக பாராளுமன்ற உறுப்பினர்களை தன்னகத்தே அடக்கி வைத்துள்ளது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தேவேந்திர பட்நாவிஸின் தலைமையின் கீழ் இயங்கி வரும் மகாராஷ்ட்ரா அரசு இயந்திரத்தில் தான் இரண்டாவது அதிகபட்சமான மக்களவை தொகுதிகள் அடங்கியுள்ளன (48). இம்மாநிலத்தின் இரண்டாம் பெரும்பான்மை கட்சியான சிவசேனாவிடம் தலா இரண்டரை ஆண்டு முதல்வர் பதவியை பகிர்ந்து கொள்ளும்

ஒப்பந்தத்தோடு மக்களவை நாடாளுமன்ற பொதுத்தேர்தல் கூட்டணியானது பா.ஜ.க. - சிவசேனாவிடையே அமைந்துள்ளது. இது ஜனநாயகத்தை குழி தோண்டி புதைக்கும் என்ற கருத்தையும் நாம் நினைவில் கொள்ளாத் தான் வேண்டும்.

மேலும் அருணாச்சல பிரதேசம், குஜராத் உட்பட நான்கு மாநிலங்களில் தனித்த பா.ஜ.க. அரசு இயங்கிவருவது நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.கவுக்கு மேலும் 42 இடங்களை உறுதி செய்கிறது.

இந்நிலையில் அண்மையில் மேற்குவங்க முதல்வரான மம்தா பேனர்ஜியின் மோடிக்கு எதிரான பிரச்சார கூட்டணி பெருமளவில் வருகின்ற பாராளுமன்ற பொதுத்தேர்தலில் எதிர்பார்க்கப்படுகிறது. அக்கூட்டணி தேர்தலுக்கு பின்னரும் பெருமளவு ஐக்கிய முற்போக்கு கூட்டணி அமைய வலுசேர்க்கும்.

வளர்ந்து வரும் அக்கூட்டணியில் 42 நாடாளுமன்ற தொகுதிகளை கொண்ட மேற்கு வங்கத்தின் முதல்வரான மம்தா பானர்ஜி, டெல்லி முதல்வரான அரவிந் கெஜ்ரிவால், 25 நாடாளுமன்ற தொகுதிகளை கொண்ட ஆந்திராவின் முதலமைச்சரான சந்திரபாபு நாயுடுவும் மட்டுமின்றி ஒடிசா மாநில முதலமைச்சரான நவீன் பட்நாயக்கும் இணைந்துள்ளனர். ஒடிசாவில் 21 நாடாளுமன்ற தொகுதிகள் உள்ளது குறிப்பிடத்தக்கது. இதுவன்றி மேற்குறியவர்கள் யாவரும் தனிப்பெரும்பான்மையோடு அந்தந்த மாநில அரசுகளை நடத்தி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

எதிர்பாராத கூட்டணி

தமிழகத்தை பொறுத்தமட்டில் சற்றும் எதிர்பார்க்காத கூட்டணியாக பா.ஜ.க. - அ.தி.மு.க.- பா.ம.க. இணைந்துள்ளது. இக்கூட்டணி அறிவிப்பினாலேயே பா.ம.க. மீது இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் அழிந்துவிட்டது. எனவே, தி.மு.க. பிரச்சாரமின்றி மக்கள் மனதில் கொஞ்சம் கொஞ்சமாக இடம்புரிவதை மனதில் வைத்து, பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளையும் உள்நோக்கி பார்க்கவேண்டியுள்ளது.

மேற்குறிய மம்தா கூட்டணியோடு, தி.மு.க. தலைவர் ஸ்டாலினும் நெருக்கம் காட்டி வருவதாலும், நாடாளுமன்ற தேர்தலில் பெரிதும் எதிர்பார்க்கும் கட்சியான காங்கிரசும் நட்பு பாராட்டி வருவதால், பெரும் திமிங்கிலத்தை அமுக்க வரும், அறிய பெரும் கூட்டணி ஒன்று பா.ஜ.க. எதிரே அமையப்போவதில் வியப்பேதுமில்லை.

கடந்த 2018ல் சட்டீஸ்கர் மாநில பொதுத்தேர்தலின் முடிவு பா.ஜ.க. மீதான அதிர்ப்தியை சுட்டிக்காட்டியிருப்பதாக தெரியவருகிறது. மொத்தமுள்ள 90தொகுதிகளில் 68 இடங்களை பெற்று மாபெரும் வெற்றியை நிலைநாட்டியிருக்கிறது காங்கிரஸ். அதேபோல் ராஜஸ்தானிலும், மத்திய பிரதேசத்திலும் பெரும் வெற்றியை பெற்று, பா.ஜ.க. மீதான மக்களின் கோபத்தை பிரதிபலித்திருக்கிறது காங்கிரஸ்.

எனவே கூட்டணியாற்ற பெரும்பான்மையோடு 4 மாநிலங்களிலும், கூட்டணிகளோடு 13 மாநிலங்களிலும் பா.ஜ.க. அரசாண்டு வந்தாலும், தற்பொழுது அதிகரித்து வரும் அரசியல் சூழலில் பா.ஜ.க.விற்கு எதிரான காங்கிரஸ், மம்தாவின் திரிணாமுல் காங்கிரஸ், தெலுங்கு தேசம் போன்ற கட்சிகளின் மாபெரும் கூட்டணி பெருமளவு வெற்றி பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக 2018ல் சட்டமன்ற பொதுத்தேர்தல்களில் சத்தீஸ்கர் மற்றும் மத்திய பிரதேசத்தில் கணிக்கப்பட்டதை போன்றே அடிப்படை மற்றும் அரசியல் நுட்ப சான்றாதாரங்களை வைத்து பார்த்தாலும் பா.ஜ.க.விற்கு தோல்வி முகம் என்பது புலப்பட்டாலும், இந்திய வானிலை போல் மாறிக்கொண்டிருக்கும் அரசியல் களத்தில் என்ன நிகழப்போகிறது என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

**- சதீஷ் செல்வ குமார்**

---

# ஒழியாது சாதி

ஒழியாது சாதி,
அழியாது சாதியின் நீதி!

ஆம்

பூமியில் காற்றுள்ள வரைக்கும்,
வானத்தில் மேகமுள்ள வரைக்கும்,
பெயருக்குப்பின் சாதியிருக்கும்
வரைக்கும்,
அரசியலுக்கு தேவைப்படும்
வரைக்கும்,
அற்ப சலுகைகளுக்குத் தேவைப்படும்
வரைக்கும்,

சாதிகள் அழியாது....

இயற்கையில் இறுகிப்போன ஒன்று,
சாதியக்காரர்களின் மீசையில்
ஒட்டிப்போன ஒன்று,

அது
மழித்தாலும் அழியாது,
அழித்தாலும் ஒழியாது,
இங்கு நீயும் நானும் பேசிப்
பயனில்லை.

காலம் கடந்து விடும்!
போராடி நின்றாலும்,
நம்மை ஓடிவந்து எட்டிப்பிடிக்கும்
செவ்வாய் கிரகத்துக்கே
சென்றாலும்....!

**- வி.முத்துக்குமார்**

# மருத்துவ அனுபவம்: பத்தியம்



ராணிச்சந்திரன்
மன்னார்குடி

எங்களிடம் மருந்து சாப்பிட வருபவர்கள், முதலில் ‘‘பத்தியம் உண்டா?‘‘ என்று தான் கேட்பார்கள். பத்தியம் என்றால் என்ன? நோயைக் குணப்படுத்த வேண்டும் என்றால் சில உணவுகளை தவிர்க்க வேண்டும். அதை தான் பத்தியம் என்கிறோம்.

நோய் என்பதே கழிவு தேக்கம் தான். கழிவை நீக்க வேண்டும் என்றால் கழிவை சேர்க்கும் உணவை உள்ளே அனுப்பாமல் இருந்தால் தானே கழிவுகளை முழுமையாக நீக்க முடியும்.

வீட்டை கழுவும்போது அழுக்கை மிதித்துக்கொண்டு வீட்டினுள்ளே போய்க்கொண்டே இருந்தோமானால் வீடு சுத்தமாகுமா? கழிவு தேக்கம் நோய், கழிவு நீக்கம் சிகிச்சை என்ற முறையில் சித்த மருத்துவம் செய்யும்போது கழிவுகளை சேர்க்கும் உணவை சாப்பிட கூடாது என்பது சித்தர்கள் காலத்து முறைகள். சித்த மருந்து என்றாலே அசைவம் சாப்பிட கூடாது என்று சொல்வார்கள், என்றே பலர் சித்த மருத்துவத்திற்கு வர பயப்படுகிறார்கள்.

அசைவம் எளிதில் செரிக்கும் உணவல்ல. அசைவ உணவுகள் செரிமானம் ஆவதற்கு கூடுதல் நேரம் தேவைப்படுகிறது. செரிமானம் ஆகாத உணவு உள்ளே இருக்கும்போது மருந்து வேலை செய்வது குறைந்து விடும். எந்த உணவு உங்களுக்கு பொருந்துமோ அதை பிடித்து சாப்பிட்டிருந்தால் கழிவும் தேங்கப்போவதில்லை, நோயும் வரப்போவதில்லை. உங்கள் உடம்புக்கு பொருந்தும் உணவு வேறு, பிடிக்கும் உணவு என வேறு வேறாக பிரித்துவிட்டீர்கள்.

பொருந்தும் உணவை உண்ணச் சொல்லி உங்களுக்கு பிடிக்கும் உணவை தவிர்க்கச்  சொல்வது தான் பத்தியம். அப்படி உங்களுக்கு பொருந்தும் உணவை 3 நாள், 7 நாள், 21 நாள், 48 நாள் என்று சாப்பிடும்போது அதுவே உங்களுக்குள் ஒரு பாகம் ஆகி உங்கள் வாழ்க்கையையே மலரச் செய்யும்.



சி. தன்யஸ்ரீ

# சமூகம் பன்முகம்


த.வா.அஜய்பிரசாத்

கோவை மாநகரம், இரவு மணி 11.30. சாலையின் இருபுறமும் மின் விளக்குகளன்றி மனித நடமாட்டமில்லாத நேரம். அருகில் அமைந்த தொழில்நுட்ப பூங்காவில் பணி நேரம் முடிந்து விடுதிக்கு திரும்பி கொண்டிருந்த இளம்பெண் எவ்வித சலனமுமின்றி நடைப்போட்டுக் கொண்டிருந்தாள்.

கடந்து செல்லும் வழியில், இரவு நேரத்தில் பணிபுரியும் இளைஞர்கள் தேநீர் நிலையம் நோக்கி சென்று கொண்டிருந்தனர். அதை கவனத்தில் கொண்ட அவள் தன் நடைப்பயணத்தை வேகப்படுத்தினாள்.

அவர்களும் அந்த திசையை நோக்கியே சென்றனர். தவறாக சித்தரித்துக் கொண்ட அவள், தன்னை  காப்பாற்றிகொள்ளும் பொருட்டு முன்தொடர்ந்து நால்ரோட்டின் வாயிலை அடைந்த போது, மிக பெரிய சத்தத்துடன் அலறல்கள். ரத்த வெள்ளத்தில் அந்த பெண் துடித்துக் கொண்டிருக்க, அந்த இளைஞர்கள் அவ்விடத்தை நோக்கி விரைந்தனர். பாதுகாப்பாக செல்ல நினைத்த அவள் எதிர்பாராத விதமாக நால்ரோட்டின் இடதுபுறம் வந்த அந்த சரக்கு லாரியை கவனிக்க மறந்த விளைவு, அப்பெண்ணின் உயிரை எடுத்துக் கொண்டது. சற்றுக் கூர்ந்து கவனித்தால் அந்த விபத்துக்கு காரணம் அந்த லாரியோ, இளைஞர்களோ மற்றும் அந்த பெண்ணோ கண்டிப்பாக இல்லை என்பது தான் நிதர்சனம். அருகில் வரும் ஒருவரை அச்சுறுத்தலாக நினைக்க வைத்த இந்த சமூகத்தின் பொறுப்பு சாசனம் இது தான்.

ஆதி முதல் அந்தம் வரை அனைத்திலும் அனைவரையும் தொழில்,அந்தஸ்து,சாதி,மதம் என பலதரப்பட்ட மக்களையும் பிரித்து பிரித்து அரசாளும் இந்த அமைப்பு. வன்முறையின் உயிர்நாடியில் அண்டிப்பிழைத்திடும் வர்க்கமாக நம்மை மாற்றி வரும் நுட்ப அரசியல். வரலாற்றை திருப்ப முயலும் சமயத்தில், அதைத் தடுத்து முயற்சியை வீணடிக்கும் இந்த காலத்தில் இது போன்ற சம்பவங்கள் நடக்காதிருப்பதே அரிது.

கடல் நீர் அலையாக வருவதற்கும் அழுத்தத்தின் காரணமாக சீற்றம் அடைவதற்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு என்பதை இந்த நேரத்தில் நினைவு கூற வேண்டும். மூடி மறைத்து ஒரு செய்தியை ஆக்கிட்டோமானால் இதே நிலை பின்னாளில் நேரிடும்.

நெருப்பில் கை வைத்தால் சுட்டெரிக்கும் என கற்றதால் அதை செய்ய எவரும் முனைய வாய்ப்பில்லை. ஏன்? நினைக்க கூட இயலாது. காயம் ஏற்படுமென்பதை உணர்ந்தால் அதை நோக்கிய பயணத்தை புறக்கணிப்பது தான் மனித இயல்பு. அதே வழிமுறை தான் பாலின வேறுபாட்டிலும். பிறப்பு முதல் இறப்பு வரை, இந்த வேறுபாட்டில் நடந்தேறும் பரிணாம முன்னேற்றங்கள் நம் சிந்தையிலிருந்து விலகி

தொலைதூரம் கடந்தாகி விட்டது. அதன் முடிவே தற்போது அரங்கேறும் குற்றங்கள், மன்னிக்கவும் கொடூரங்கள்! என்ன இது? பாலியல் கல்வி குறித்த விழிப்புணர்வோ என எண்ண வேண்டாம் நண்பர்களே. கல்வி வேறு, அறிவு வேறு.

இந்த வேறுபாட்டின் அறியாமையில் தவிக்கும் வேளையில் சினம் கொண்டு வீறு நடை போடும் கலியுக புத்திரர்கள் முளைக்கும் காலகட்டம் இது. எவற்றையும் மறைத்தும் பயனில்லை, மறுத்தும் விடவில்லை என்கிற போக்கில் ஆற்றோடையில் சரிந்து, மெலிந்து, கலந்து செல்லும் நீரைப் போல, வேண்டாவனவற்றை தானே வடிகட்டும் தொழில்நுட்ப விஞ்ஞான பயனாளர்கள் இங்கே சங்கமித்து விட்டனர்.

சங்கமிக்கும் நாட்களில் துயர் உணரும் பெண்களுக்காக, துடைக்கும் ஆண்களுக்காக சில வரிகளுடன் முற்று.

சந்தர்ப்ப வாயிலில் காலங்கள் கழிவதுமே
அட்சாரம் போட்டதோர் மாயையில் தந்திரமாய்
வித்திட்ட சக்கரங்கள் நடைபழக சென்றிடுமே
பந்தயத்தின் எல்லையில் கைவீசும் மாத்திரமாய்

ஏமாற்றம் அகராதியில் புன்னகைக்கும்
கரையோரம் அலைகளில் தத்தளிக்கும்
நீந்திடும் வேளையது தூண்டிலில் சிக்கியே
வேடிக்கை ரசித்திடும் பன்முக சாஸ்திரங்கள்

கனவுகள் கண்டிடும் பருவங்கள் ஓரமாய்
உறக்கங்கள் தொலையுமே துருவங்கள் கரையுமே

வர்க்கங்கள் ஆட்சியே பெண்ணியம் சாரமாய்
சுழன்றிடும் இறகுகள் கோட்டையின் சிற்பமே
இமைத்திடும் காரிகை விழித்திடும் நேரமே
கரங்களும் கோர்த்திடும் சித்திரமும் வரைந்திடும்

சித்திரம் பேசிடும் மையினது துளிகளுடன்
கோர்த்தோருக்கும் வரைந்தோருக்கும்.



திருமதி. பிரியா
மன்னை

இந்த பதிவு வெறும் வார்த்தைகள் அல்ல, இதயக் கூக்குரலின் வெளிப்பாடு. பொள்ளாச்சியில் நடந்த பயங்கரம் அனைவரும் அறிந்ததே, நெஞ்சை உலுக்கும் காணொளிகள் காணும் அனைவரின் கண்களிலும் நீர் தேக்கும்.

இத்தகைய சம்பவங்கள் எதிர்வரும் காலங்களில் முற்றிலும் துடைத்தெறிய இருக்கும்

சிறிய சுதந்திரத்தையும் பெண்களிடம் இருந்து பிடுங்கி எறியாமல் உறவுகளின் உன்னதத்தையும், மனித இன மாண்பினையும் வார்த்தெடுக்கும் பெற்றோர், சுற்றோர் என அத்துணைப் பேரும் போதித்தோமானால் ஒழிய, சந்திர வெளிச்சம் குளிர்விக்காது.

நம் நாட்டின் சுதந்திரம், வேறெந்த நாட்டிற்கும் கிடைக்காத அறிய பெட்டகம். இதை மறந்து அரபு நாடுகளை போன்று கையில் சூடு போட்டுக் கொள்ளும் எண்ணம் மறந்து குற்றங்களின் தீர்வாய் தண்டனை பற்றிய விவாதம் விடுத்து நல்லெண்ணம் புகட்டும் பாதையைக் கண்டறிவீர். இறுதியில் தனிமனித ஒழுக்கம் வேர் வரை ஓங்கட்டும், தமிழ் மறை செழிக்கட்டும்!

**- த.வா.அஜய்பிரசாத்**

---

# நடுகல்



திருச்சி பார்த்தி

நீண்ட நெடிய நமது தமிழர் வரலாற்றின் வியக்கவைக்கும் பல விடயங்கள் ஆதாரங்கள் மற்றும் விளக்கங்களுடன் தங்களுடன் பகிர்கிறேன்...

காதலும், வீரமும் பிரிக்க முடியாவண்ணம் ஒருங்கே அமையப்பெற்றது நம் தமிழரின் வாழ்வியல்!

முடியுடைய வேந்தர் மூவரும், வேளிரும் தமக்குள் மேலாண்மை, அதிகாரம் நிலைகொள்ள போரிட்டுக் கொண்டனர்.


குடிமக்களும் தம்முள், அக்காலத்திய பெருஞ்செல்வமான மாடுகளை கவரும் பொருட்டு மாண்டுள்ளனர். இவற்றை சங்க இலக்கியங்கள் ‘‘தொரு பூசல்’’, ‘‘ஆநிரை கவர்தல்’’ என கூறுகின்றன. இவர்கள் மட்டுமில்லாது குறிஞ்சி நில மாந்தர்கள் வேட்டையாடும்போதோ அல்லது ஊரை அச்சுறுத்திய பன்றி, புலி, போன்ற விலங்கினத்திலிருந்து மக்களை காப்பாற்ற சமர் புரிந்துள்ளனர். இவ்வாறு நிகழ்ந்த சமரில் இறந்து போன வீரர்கள் நினைவாய் மக்கள் போற்றி வந்துள்ளனர். போரில் மரணம் ஏற்படும் நிகழ்வு போர்க்களத்தில் வழக்கமான ஒன்று. அப்போர்தனில் பெருவீரம் காட்டியோர், மக்களை காப்பாற்ற விலங்கினங்களோடு போராடி தன்னுயிரை இழந்தோருக்கு, இறந்த இடத்தில் கல்லெழுப்பி வணங்கும் வழக்கம் இருந்துள்ளது. இதனை நடுகற்கள் அல்லது வீரக்கற்கள் என அழைக்கப்படுகிது. ஆங்கிலத்தில் இவ்வகை கற்களை Herostones என்பர்.

ஆரம்ப கட்டத்தில் இறந்தவர் நினைவாய் ஒரு பெரும் கல்லெழுப்பி வணங்கியதும், பின்னர் கி.மு 4 ம் நூற்றாண்டு அளவில் அக்கற்களில் இறந்தவரின் பெயரையும்,

ஊரினையும் இறந்த காரணத்தினையும் கல்லில் பொறித்துள்ளனர். புலிமான் கோம்பை, தாதபுரம், பொற்பனைக்கோட்டை நடுகற்கள் இந்நிகழ்வை எடுத்துக்காட்டுகிது. அதற்கடுத்ததாய் இறந்தவரின் உருவத்தினை ஒரு கோட்டுருவமாய் வரைந்துள்ளனர். இவ்வகை உருவங்கள் கிருஷ்ணகிரி, தர்மபுரி பகுதிகளில் கிடைக்கிறது! இன்னும் சில காலம் கழித்து இறந்தவரின் உருவத்தினையும், அவர் காட்டிய வீரத்தினையும் சிற்பமாய் வடிக்கும் வழக்கம் வருகிறது! பல்லவர் காலம் தொட்டு நாயக்கர் காலம் வரை இவ்வகை நடுகல் நிறைய கிடைக்கிறது! இக்கற்களின் மன்னரின் பெயர், அரசு, ஆட்சியாண்டு, இறந்தவரின் விவரம், உருவம், இறப்பிற்கு காரணம் ஆகியவை முழுதாய் கல்வெட்டாய் பொறித்துள்ளனர்.

இவ்வாறு இறப்பவர்களின் குடும்பத்தாருக்கு உரிய மரியாதை அளிக்கப்பட்டுள்ளது. நிறைய நிலங்கள் தானமளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வழங்கப்படும் நிலம் ‘‘உதிரப்பட்டி நிலம்‘‘ என அழைக்கப்படும்.









பொற்பனைக்கோட்டை

தகவல் திருச்சி பார்த்தி

யாஉளயாகே

# ஆண்களின் சக்தி



கற்பகம் (ஆசிரியை)

ஆண் குழந்தை பிறந்த உடனே ''ஆண் குழந்தை பிறந்துள்ளது'' என்ற மகிழ்ச்சி நெடிலாக பிரதிபலிக்கிறது. பிறக்கும் போதே ஆனந்தம் தான். வளரும்போதே ''ஜான் பிள்ளையானாலும் ஆண் பிள்ளை' என்று கூறி பெருமைப்படுத்துவார்கள். அக்கா, தங்கை என இருந்தால் அவர்களுடைய எதிர்காலத்தை நிர்ணயம் செய்யும் மிகப் பெரிய பொறுப்பை ஆண் மகனிடம் தான் கொடுப்பார்கள்.

ஆண் பிள்ளைகள் உடலில் மாற்றம் ஏற்படும்போது, மீசை முளைத்தவுடன், ''காலரை தூக்கிவிட்டு, வேட்டியை மடித்துக்கட்டி, சிங்கம் போல நடந்து வாடா மகனே!'' என்றல்லவா கூறுவார்கள். திருமணம் ஆனால் கூட உங்கள் ஊர், வீடு, சொந்தபந்தம் என அனைத்து சக்திகளும் உங்களிடம் பலம் அடைந்துக் கொண்டே இருக்கும். இப்படிப்பட்ட சிறப்புகள் நிறைந்த ஆண் சக்திகளே! வலிமை பொருந்தியவர்களே! உங்களால் எந்தவித சாதனைகளையும் செய்ய முடியும். பத்தாம் வகுப்பு படிக்கும்போது அரும்பு மீசை, உடல் வளர்ச்சி மாற்றம், ஹார்மோன்கள் ஏற்படுத்தும் சில தவறான சிந்தனைகள், பழக்கங்கள், செயல் என ஈடுபடாதீர்கள்.

பெண்கள் உடல் ரீதியாக மாதா மாதம் பருவத்திற்கு பருவம் பல பிரச்சனைகளை சந்தித்து அதிலும் விடா முயற்சியினால் பல சாதனைகளை சில பெண்கள் செய்கின்றனர். ஆண்களுக்கு உடல் ரீதியான எந்த இயற்கையான தடைகளும் கிடையாது. இறைவன் பெண்களுக்கு தாய்மை என்னும் ஒரு சக்தியை மட்டும் வழங்கி, ஒரு குடும்பத்தை மட்டுமே வழிநடத்தும் பலம் பொருந்தியவர்களாக படைத்துள்ளார்.

ஆனால் ஆண்களுக்கு உடலாலும் உள்ளத்தாலும் சக்தியை கொடுத்து எந்த தடைகளும் இல்லாமல் வீட்டையும், ஊரையும், நாட்டையே ஆளும் சக்தியை இறைவன் கொடுத்துள்ளார். இந்த அற்புத சக்தியை ஒவ்வொரு ஆண்மகனும் புரிந்துகொண்டு சில ஆண்கள் சில சாதனைகள் புரியாமல் அனைத்து ஆண்மகன்களும் பல பல சாதனைகளை புரிய எனது வாழ்த்துகள்.

# காதலர் தினம்

கண்கள் பேசும் பாஷையை
மனம் அறிந்து மனதும்
மனதும் உணரும் மகரந்த
சேர்க்கை தான் காதல்

மானிட உலகில் நவயுகம்
காதலையும் விட்டு
வைக்கவில்லை!
கலவி என்ற கலை
கரம் பிடிக்கும் முன்னரே
ஒத்திகைப் பார்க்கப்படுகிறது.

இதன் விடையாய்
சாக்கடையும் குப்பைத்
தொட்டியும் ஒரு
சிசுவை தன் மடியில்
தாங்கிக் கொள்கிறது.

இது போதுமோ என்று
கழிப்பிடத்தில் மலம் ஜலம்
கழித்ததுபோக கருவும்
கழிக்கப்படுகிறது
உதிரப்போக்காகஶ்ரீ

காதல் என்பது அன்று
நேசத்தில் உரசியது,
உணர்வின் ரீதியாக!
நித்திரையில் மட்டும்
உடலை உரசி
இன்று நிஜத்தில் உரசுகிறது
காமத்தின் மிச்சமாக காதல்!

காதல் என்பது இரு உள்ளம்
சேர்வது ஆயுள் வரை,
கலவி முடியும் வரை
சேர்வது காதல் அல்ல மோகம்!

சிறுதுளிகளில்
தீந்து விடுகிறது ச்சீ என்று ,
ஆதலால் இன்று நிறைய
பிரிவும் ஏற்படுகிறது.
புரிந்துகொள்வோம் காதல்
என்பது நேசத்தின் பந்தம்
நம் பண்பாடு
அனுதினம் கொள்வோம்
நம் நேசகர்களிடம்!

காதல் மூன்று முடிச்சி
போட்ட பின்பு
தொடர்வோம், தொடுவோம்.
அன்றும் மனதிலே காதலில் மிச்சமாய்
தேகத்தை அது தான் நம்முடைய
நேசம்!

காமத்தின் மிச்சமாய் காதலை
எண்ணாமல் காதலில் மிச்சமாய்
காமத்தை எண்ணுவோம்.
கல்லறைவரை
காதல் செய்வோம்,
திருமணம் முடித்து
நம் நேசர்களோடு
என்பதை மனதில் விதைத்து
காதலர் தினம் கொண்டாடுவோம்
கண்களால் உரசி....!


இனிய காதலர் தின நல்
வாழ்த்துக்கள்...!!!

நன்றி

**ஆரூர் கவிஞன் தீன்**
பொதக்குடி...!!

மன்னார்குடி ரா. ராஜேஷ்

எழுதும் தொடர் முதல் அத்தியாயம் (பகுதி 11)



# செண்பக வனம்

புலி வேட்டைக்கு வந்தவர்களைப் புலியே வேட்டையாடிப் பார்த்திருக்கிறீர்களா? இன்று பார்ப்பீர்கள்! ஏனெனில் வேட்டையாட போகும் புலிகளே நீங்கள்தான்....

புலி வேட்டை ஆரம்பம்......

அல்ல அல்ல, புலிகளின் வேட்டை ஆரம்பம்!

என்று அருண்மொழித்தேவர் ஆவேசத்துடன் பேசிக்கொண்டிருந்த அதே நேரத்தில் கூடாரத்தின் வெளியே கனைத்துக் கொண்டு வந்து நின்ற குதிரையின் சப்தம் கேட்கவே சசிதரன் மட்டும் வெளியே சென்றார். சில வினாடிகளில் திரும்பி வந்த சசிதரன், இளவரசர் அருள்மொழித்தேவரை நோக்கி ''இளவரசே, களபுறாவுடன் தூதுவனும் வந்துவிட்டான். இனி நாம் இங்கிருந்து கிளம்பலாமல்லவா''? என்றார். அதற்கு ஆமாம் என்பது போல் தலையசைத்த அருண்மொழித்தேவர், மதுராந்தகரை நோக்கி தம்பி, உன் மெய்க்காவல் படையில் உள்ள மருதனை தெரியுமா ? ''தெரியுமே அண்ணா''!,
''அவனை அழைத்து வா'' என்று கூறிய அருள்மொழித்தேவர், மதுராந்தகரின் பதிலை எதிர்பார்க்கவில்லை. சசிதரனின் பக்கம் திரும்பி இரண்டு ஓலைகளை எழுத பணித்தார். அதற்குள்ளாக மதுராந்தகனும் மருதனும் இளவரசர் அருள்மொழித் தேவரின் முன்பாக நின்றிருந்தனர். மருதா, உனக்கு அவசர நிலைப் பயிற்சி அளிக்கப்பட்டு இருக்கிறதல்லவா? என்றார் அருண்மொழி.
ஆமாம் இளவரசே! என்றான் மருதன்.

இதோ இப்போது முதல் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இனி நீதான் இங்கு ''மதுராந்தகன் '' அவனைப் போல் எனக்கு ஒரு முறை நகலெடுத்துக் காட்டு என்று இளவரசர் அருண்மொழி சொன்னதை கேட்ட அந்த கனமே மதுராந்தகனாகவே மாறிப்போனான் மருதன். நிற்கும் தோரணை, நடை, வாள்பிடிக்கும் விதம், இளவரசர் குரலிலேயே பேசும் விதம் என முழுவதுமாக மதுராந்தகனாக மாறி நின்ற மருதனைப் பார்த்து அதிசயத்து நின்றார் இளவரசர் மதுராந்தகர்..
''அடடே! சிறப்பு மருதா, சரி சரி இருவரும் உடை மாற்றி தயாராகிக் கொள்ளுங்கள் ''என்று

அவர்களுக்கு கட்டளைப் பிறப்பிப்பது போல் கூறினார் இளவரசர் அருண்மொழித்தேவர் .

கூடாரத்திற்குள் இப்படி சம்பவம் நடந்து கொண்டிருக்க, கூடாரத்தின் வெளியே கோவில் பணிக்காக கொட்டப்பட்டிருந்த கருங்கற்களின் மறைவில் மெய்க்காவல் படைவீரர்களுக்கு தெரியாத வண்ணம் மூன்று பேர் கூடாரத்தைக் கண்காணித்துக் கொண்டிருந்தனர்.

அதில் ஒருவன், சத்திரத்திலிருந்து இளவரசரையும் சசிதரனையும் பின்தொடர்ந்து வந்த மாறுவேடகாரன்தான். அவர்களுக்குள் நடந்த கிசுகிசுக்கள் பின்வருமாறு
அடேய் ''சோமா'' நீயும் நானும் சேர்ந்து எத்தனையோ பேரை வகை வகையாய் கொலை செய்திருக்கிறோம். இந்த சிறுவனையும், அவனை பாதுகாக்கும் 20 பேரையும் கொல்வது ஒரு பெரிய வேலையாக எண்ணி, என்னை கண்காணிக்க வேறு நீ வந்திருக்கிறாய். இது எனக்கு எத்தனை பெரிய இழிவு தெரியுமா? என்று கோபமாக முனகிக்கொண்டிருந்த ''கோபாலனை'' நோக்கி மாறுவேடக்காரனான சோமன் கூறியதாவது ''டேய் மடையா இங்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று உனக்கு தெரியுமா? ''

முச்சந்தி சத்திரத்தில் இன்று அதிகாலை எங்கிருந்தோ ஒரு வீரன் வந்தான். நமது ஆட்கள் இருந்த இடங்கள் எல்லாம் சுற்றி திரிந்தான். அவனின் நடவடிக்கை எனக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. அவனை பின் தொடர்ந்தேன். காட்டுக்குள் இருக்கும் ஒரு கூடாரத்தை கூட விட்டு வைக்கவில்லை அவன். எல்லா இடங்களுக்கும் சென்று வந்தவன், ராஜபாட்டைக்கு வந்த போது அவன் வருகைக்காய் காத்திருந்தவன் போல அங்கே ஒரு குதிரை வீரன் வேறொரு குதிரையோடு இருந்தான். நான் பின்தொடர்ந்த வீரனும் அந்த குதிரை மீது ஏறி கொண்டு இருவரும் இங்கே வந்தார்கள்.

நானும் அவர்களை பின்தொடர்ந்து வந்தேன். ஆனால் அவர்கள் மிக வேகமாக வந்து விட்டார்கள். பாதி வழியில் நான் அவர்களை தவறவிட்டு விட்டேன். பிறகு ஒரு கணிப்பில் இங்கு வந்தேன். அதோ அந்த குதிரைகள் அவர்கள் வந்தது தான், அதை பார்த்தவுடன், நீயோ, உன் ஆட்களோ இங்கு தான் எங்காவது கண்காணிப்பில் இருப்பீர்கள் என்று தெரியும், அதான் உங்களை தேடி ஒரு சுற்று வந்தேன். உன்னைக் கண்டுபிடித்தேன், இங்கு வந்தோம். அதனால் இங்கு நடந்தவைகளை நீங்கள் தான் சொல்ல வேண்டும்'' என்றான் சோமன்.

''அடேய் முத்துமணி, நீதானே இங்கிருந்தாய். அந்த குதிரைவீரர்கள் வந்த போது நடந்தவற்றைக் கூறு'' என்றான் கோபாலன்.

சரி ஐயா, இந்த குதிரைவீரர்கள் வருவதற்கு முன்னாள் மலை வேடர்கள் கொஞ்சம் பேர் இளவரசரை காண வந்திருந்தனர். காலை வழிபாட்டை முடித்துக்கொண்டு வந்த இளவரசர், அவர்களில் ஒருவரை மட்டும் உள்ளே அழைத்துச் சென்றார். அவர்கள் உள்ளே போன சற்று நேரத்திற்கெல்லாம் நீங்கள் சொன்ன அந்த குதிரை வீரர்கள் வந்தார்கள். அவர்களில் ஒருவர் கூடாரத்திற்குள் நுழைய முற்பட்டார். ஆனால் காவலர்கள் முதலில் தடுத்தனர் பிறகு உள்ளே விட்டனர்.

அதன் பிறகு அடுத்த வீரரும் உள்ளே போனார். சற்று நேரத்தில் இளவரசர் முன்னமே அழைத்துச் சென்ற மலை வேடுவர் உள்ளிருந்து வெளியே வந்தார். வந்தவர், அவரோடு வந்தவர்களை அழைத்துக் கொண்டு சென்று விட்டார். அந்த சமயத்தில் தான் நீங்கள் வந்தீர்கள்‘‘ என்றான் முத்துமணி.

மூவரும் மௌனமானார்கள், சோமன் மட்டும் சிந்தனையில் இருந்தான். அவன் சிந்தனையைக் களைக்கும் வண்ணம் அவன் தோளை உலுக்கிய கோபாலன், டேய், சோமா, அங்கே பார் இளவரசன் வெளியே வருகிறான் என்றான்.

மூவரும் அங்கே நடப்பதைக் கவனித்தனர். கூடாரத்தை விட்டு வெளியே வந்த இளவரசர், மதுராந்தகன் வெளியே நின்றிருந்த வீரனொருவனை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றார். சற்று நேரத்திற்கெல்லாம் மூன்று பேர் வெளியே வந்தார்கள்.

கூடாரத்தை விட்டு வெளியே வந்த மூவரும், ஆளுக்கொரு குதிரை மீது ஏறிக் கொண்டு அங்கிருந்து நகர களபுறாவுடன், உடன் அங்கு வந்திருந்த தூதுவனும் அவர்களோடு இணைந்து கொண்டான்.
‘‘அவன் யாரடா புதிதாய் ஒருவன்?‘‘ என்றான் சோமன். நீ வானத்தை நோக்கி ஆலோசித்துக் கொண்டிருந்த நேரத்தில் இவன் வந்து கூடாரத்தின் வெளியே நின்று கொண்டிருந்தார். ஆனால் அவன் யார் என்று தெரியவில்லை, அவன் தோற்றத்தை ஆராய்ந்தால் தூதுவன் போல தெரிகிறது. ஆனால் நிச்சயமில்லை என்றான் கோபாலன்.

இங்கு எதோ நடக்கிறது ஆனால் என்னவென்று தான் தெரியவில்லை என்று பெருமூச்சு விட்ட சோமனின் கண்ணில் மின்னலைப் போல மின்னிய ஒளி தென்பட்டது.
சோமன் உடனே பரபரப்பாகி ஒளி வந்த இடத்தை உற்று நோக்கினான். ஆச்சரியமும், சந்தோசமும் ஒன்றாய் எழுந்து உடனே மறைந்தது. இவ்வாறான மாறுபட்ட உணர்ச்சிகளால் சோமனின் முகபாவனை பல கோணங்களில் மாறுவதை கண்ட கோபாலன் ‘‘என்னடா என்னவாயிற்று‘‘ ? என்று கேட்டான்.

‘‘கோபால நீயும் உன் சகாக்களும் இனி இங்கு காத்திருந்து பிரயோஜனம் இல்லை, நீங்களும் முச்சந்தி சத்திரத்துக்கு வந்து விடுங்கள்.
நான் அவர்களை பின் தொடர்கிறேன்.‘‘
என்றான் சோமன்.

‘‘அடேய் சோமா உனக்கு பைத்தியம் பிடித்துவிட்டதா இப்படி திடீரென்று திட்டத்தை மாற்றுகிறாய், இளவரசனை கொல்ல வேண்டாமா‘‘ ? என்றான் கோபாலன்.
‘‘இளவரசனை கொல்லவேண்டும் என்றால் அவன் இங்கே இருக்க வேண்டுமல்லவா? அவன் தான் அவர்களுடன் சென்று கொண்டிருக்கிறானே‘‘ என்றான் சோமன்.

‘‘என்ன!, அவர்கள் உடன் செல்வது இளவரசனா? அதை எப்படி நீ கண்டுபிடித்தாய்.? என்ற கோபாலனை நோக்கி கோபத்துடன் திரும்பிப் பார்த்த சோமன், ‘‘ உன் கேள்விக்கெல்லாம் நான் பதிலளித்துக் கொண்டிருந்தால் அவர்களை என்னால் பின் தொடர முடியாது. நான்

சொல்வதை செய். இது என் கட்டளை, முச்சந்தி சமுத்திரத்தில் நாம் சந்திப்போம் வருகிறேன்'' என்று கூறிய சோமன் வேக வேகமாக ஓடிப்போய் மறைத்து வைத்திருந்த குதிரை மீது ஏறி மின்னலாய் பாய்ந்தான்.

சோமனைப் பின் தொடர்ந்துக் கொண்டிருந்த ருத்ரனும் சோமனை மின்னலாய் தொடர்ந்தார்..

திருவண்ணாமலைக்கும் திருக்கோவிலூருக்கும் இடையேயான அந்த ராஜபாட்டையில் முச்சந்தி சத்திரத்திற்கு நெருங்கும் தருவாயில் தான் இளவரசருக்கு அவர்களைப் பின்தொடர்ந்து அதே வேகத்தில் வேறு ஒரு குதிரையின் காலடிச் சப்தம் வருவது என்கிற சந்தேகம் உறுதிப்பட்டது. நான் அவர்களைப் பின் தொடர்ந்து, அதே வேகத்தில் வேறு ஒரு குதிரையின் காலடிச் சப்தம் வருவது.

ஆகவே தனக்கு முன்னால் சென்று கொண்டிருந்த சசிதரனை முந்திக்கொண்டு குதிரையை விரட்டினார் இளவரசர் அருண்மொழித்தேவர். முச்சந்தி சத்திரத்தின் முன்னாலிருந்த கண்டராதித்தபுரத்தில் இராஜ பாதைக்கு குதிரையை திரும்ப நினைத்து இருந்த சசிதரனுக்கு இது சற்று தடுமாற்றமாய் போனது. ஆனாலும் சுதாரித்துக் கொண்ட சசிதரனும் மற்றவர்களும் இளவரசர் அருண்மொழித்தேவரை பின்தொடர்ந்தார்கள். முச்சந்தி சத்திரத்திலிருந்து சில கால தூரம் சென்று கொண்டிருந்த நேரத்தில், தனது குதிரையை நிறுத்தினார் அருண்மொழித்தேவர்.

மற்றவர்களையும் நிறுத்த சொல்லி, ராஜபாட்டையின் பக்கவாட்டில் உள்ள புதருக்குள் குதிரைகளை மறைத்து விட்டு, தாங்களும் மறைந்து கொண்டனர். ''இளவரசே, என்னவாயிற்று''? என்று கேட்ட சசிதரனை சப்தம் ஏற்படுத்தாமல் அமைதி காக்குமாறு சைகை செய்து விட்டு எல்லோரும் புதருக்குள் மறைந்துக் கொண்டார்கள். சற்று நேரத்திற்கெல்லாம் சோமன் அவர்களை கடந்து ராஜபாட்டையில் வெகுவாக வேகமாக சென்றான். அவன் சென்று மறையும் வரை காத்திருந்த இளவரசர், சோமன் மறைந்தவுடன், சசிதரன், இவன் நம்மை காலையில் இருந்து பின் தொடர்கிறான் என்று கூறிக்கொண்டே அவர்களின் குதிரைகளை ஆராய தொடங்கினார்.

இளவரசர், மதுராந்தகர் பயணித்த குதிரையின் பக்கவாட்டில் அவர் கண்ட காட்சி அவருக்கு கோவம் வர செய்தது....

அப்படி அவர் எதை கண்டார்?

## புலிகளின் வேட்டை தொடரும்..........

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

<u>நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்</u>
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal    Thiravukolmagazine